புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலையம்.

பிரசுரம்] 1944-ம் ௵ டிஸம்பர் ௴ 9௳ [ந. 227

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

—19-ம் பக்கம் பார்க்க.

பிரஸங்கம் CCXXVII.

ஹங்கேரியின் பூகோள அமைப்பு.

(காப்ரியல் *D.* ஹாகட், கிரிஸ்டியன் ஸயன்ஸ் மானிடர்.)

டான்யூப் நதிக்கரையிலுள்ள ஹங்கேரியத் தலைநகரமான ஒரு காலத்தில் அழகிய நகரமாகயிருந்த புடாபெஸ்ட் இப்பொழுது சிதிலமாகக்கிடக்கிறது. அதன் அழகுமிகுந்த பாலங்கள் நேசதேச வெடிகுண்டுகளால் நொறுக்கப்பட்டுவிட்டன. புடாபெஸ்டைப்போல இந்தப் பாலங்களும் நாஸிகளின் யுத்த தந்திரத்தில் முக்கியத்துவமுள்ளவை.

பூகோள அமைப்பினால் சில தேசத்தவர்கள் அவர்களின் குணாதிசயத்துக்குப் பொருத்தமில்லாதபடி சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டி ஏற்படுகிறது. பூகோள அமைப்பின் காரணமாக ஹங்கேரிய ஜனங்கள் ஆயிரம் வருஷங்களாக அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

டான்யூப் நதிப் பிரதேசத்தில் மகத்தான சாம்ராஜ்யம் ஏற்படும் நிலைமையிலிருந்தபொழுது, மாக்கியார்கள் மத்திய டான்யூப் பிரதேசத்தில் படையெடுத்தபொழுது இது ஆரம்பமாகிற்று. ஸ்லாவியர்களல்லாத ஆசியா தேசத்தவரான மாக்கியார்கள் இந்த சாம்ராஜ்யத்தை அழித்து தங்களுடைய ராஜ்யத்தை அங்கு ஸ்தாபித்தார்கள். இந்த நடவடிக்கை மூலம் அவர்கள் தெற்கு ஸ்லாவ் ஜனங்களை வடக்கு ஸ்லாவ் ஜனங்களிடமிருந்து ஆயிரம் வருஷங்கள் வரையில் பிரித்துவிட்டார்கள்.

இந்தக் காலத்தில் மாக்கியார்கள் ஜெர்மானியர்கள் மேற்குப்பக்கத்தில் ராஜ்யத்தை விஸ்தாரம் செய்வதையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. ஜெர்மன், ரோமன் சாம்ராஜ்யங்களுக்கும் மத்தியில் பலமான மத்திய நாடாக ஹங்கேரி இருப்பது ஆயிரம் வருஷங்களுக்கு முன்னும் கஷ்டமானதுதான். நேசதேசத்தாராக இருந்தாலும் விரோதிகளாக இருந்தாலும், ஹங்கேரி எப்பொழுதும் பிறநாடுகளின் ஆக்கிரமணத்துக்கும், கொடுமைக்கும் உட்பட்டிருந்தது. இந்த முறையில் ஆஸ்திரிய சாம்ராஜ்யம் ஜெர்மனி மயமாகத்தான் இருந்தது. ஆகையினால்தான் ஹங்கேரியின் குழப்பமான சரித்திரத்தில் ஹங்கேரியர்கள் ஜெர்மானிகளை வெறுத்தது போல மற்ற யுத்த விரோதிகளை வெறுக்கவில்லை. ஆகிலும் பூகோள அமைப்பு, அதாவது டான்யூப் நதிப் பள்ளத்தாக்கின் முக்கியமான மத்திய பாகத்தைக் கைப்பற்றுவதுதான் ஹங்கேரியின் விதிக்கு முக்கியமான பிரச்னையாக இருந்தது. ஹிட்லரும் ஹங்கேரியின் உதவியன்னியில் பால்கன் நாடுகளையும் அல்லது கிழக்கு நாடுகளையும் வசப்படுத்திவிடலாமென்று கனவிலும் நினைக்கமுடியாது. ஆகையால் ஐரோப்பாவில் கிழக்குப் பக்கத்தில் சாம்ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்துவதற்கு ஹங்கேரிதான் பாய்ச்சல் ஸ்தலம். ஆகை

யால்தான் ஹிட்லர் முதல்முதலில் ஹங்கேரியைப் பிடித்துக்கொள்ளும்படி நேரிட்டது. இந்த கட்டத்தில்தான் இருபது வருஷங்களாக உள்ள ஹங்கேரியின் உள்நாட்டு நெருக்கடியும் ஹோர்தியன் பாஸிதத்வமும் தோன்றின.

முதல் உலக யுத்தத்துக்குப்பின் ஆஸ்திரோ ஹங்கேரிய மன்னராக்ஷிக்குட்பட்டிருந்து பிளவுபட்ட நாடுகளான ஸெகோஸ்லவேகியா, ஆஸ்திரியா, யூகோஸ்லாவியா, ருமேனியா என்ற நாடுகள் நில ஸ்வான்தார் என்ற பிரபுக்களான ஆக்ஷியை ஒழிக்க முற்பட்டார்கள். அதற்கு விரிவான நில சம்பந்தமான சீர்திருத்தங்களை மேற்கொண்டார்கள். குறுகலான எண்ணங்களுள்ள அரசாக்ஷி செய்யும் வகுப்பாளர்களைத்தவிர மற்றெல்லாவற்றையும் இழந்த ஹங்கேரியில் அவசியமான ஒரு சீர்திருத்தங்களும் செய்யப்படவில்லை.

இருபது வருடங்களாக அக்கிரமப் போர்முறையைத் திருத்தியமைக்கவும், இழந்த நாடுகளை திரும்பி அடைவதுமாக ஹங்கேரியர்கள் ஆழ்ந்திருந்தவர்களாக இருந்ததால் அவர்கள் ஜனநாயக சீர்திருத்தங்களை மறந்துவிட்டார்கள். ஹங்கேரியிலுள்ள பிராசீனமான பிரதிநிதித்வ சபையிலுள்ள எதிரிக்கக்ஷியினர் அக்கம்பக்கத்திலுள்ள அயல்நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள அநேகம் தடவைகளில் முயன்றார்கள். இந்த முயற்சிகள் ஒரு தடவையிலும் பயன்படவில்லை. ஏனெனில் நிர்வாகம் இழந்த தேசங்களைத் திரும்பிப் பிடிக்க முயன்றுவந்தது. ஆகிலும் உண்மையில் இதைவிட அதிக விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டியிருந்தன. இவ்விதமான நட்புள்ள சம்பந்தங்கள் தேசத்தில் ஜனநாயக முறைகளை நிச்சயமாக அமுலுக்குக் கொண்டுவந்திருக்கும். ஜனநாயகம் ஏற்பட்டுவிட்டால் ஹோர்தி நிர்வாகம் உடன்காலத்திலேயே முடிவடைந்திருக்கும்.

இரண்டாவது உலக யுத்தத்திலும் தோல்வி பெற்றபின் ஹங்கேரியின் கதியில் எது ருசிகரமாகயிருக்கும். அதன் விசித்திரமான அமைப்புதான். மறுபடியும் அது எல்லைப்புற நாடாக அமைக்கப்படும்.

வார யுத்தச் செய்திகள்.

(A)-முக்கியமான சம்பவங்கள்.

27—11—44 (திங்கட்கிழமை).	அமெரிக்கர்கள் ரூரிலுள்ள பார்மனைப் பிடித்தார்கள்.
28—11—44 (செவ்வாய்க்கிழமை).	செம்படை வடக்கு ஹங்கேரிக்குள் டான்யூப் நதியைத் தாண்டிச்சென்றது.
29—11—44 (புதன்கிழமை).	நேசதேசப் படைகள் டோடிகானிஸ் தீவிலுள்ள பிஸ்கேயிலிறங்கின. ருஷ்யர்கள் ஹங்கேரியிலுள்ள எஜரைப் பிடித்தார்கள்.
30—11—44 (வியாழக்கிழமை).	பிரிடிஷ் படைகள் பர்மாவிலுள்ள பின்வியைப்பிடித்தன.
1—12—44 (வெள்ளிக்கிழமை).	ருஷ்யர்கள் ஸெகோஸ்லவேகியாவிலுள்ள டிரெபிஸாவ் என்னும் இருப்புப்பாதை ஜங்ஷனைப்பிடித்தார்கள்.
2—12—44 (சனிக்கிழமை).	செம்படை டான்யூப் பிரதேசத்தில் ஷெக்ஸ்ஸார்ட், காபோஸ்வார், பாக்ஸ், டாம்போவர், போனிஹாட் முதலியவற்றைப்பிடித்தது.
3—12—44 (ஞாயிற்றுக்கிழமை).	கிழக்கு ஆபிரிக்கப்படைகள் பர்மாவிலுள்ள கலிவாவைப்பிடித்தன. பிரிடிஷ் 8-வது படை இதாலியிலுள்ள ரஸ்ஸியைத் தாண்டிச்சென்றது. செம்படை ஹங்கேரியிலுள்ள மிஸ்கேயிக்கையும், சாடரால் ஜாஜெலியையும் பிடித்தது.
4—12—44 (திங்கட்கிழமை).	பிரிடிஷ் 8-வது சேனை இதாலியிலுள்ள ரஸ்ஸியைப் பிடித்தது. கிரேக்க நிர்வாகம் ஆதென்ஸில் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது.
5—12—44 (செவ்வாய்க்கிழமை).	பிரிடிஷ் 8-வது சேனை இதாலியில் ராவென்னவைப் பிடித்தது. செம்படை பாலடான் நதியை அடைந்தது.

(B)-செய்திச் சுருக்கம்.

மேற்குப் போர்முனை :—

(1) **ஹாலந்து.**—பிரிடிஷ் படைகள் வென்லூவிலுள்ள தற்காப்புகளை ஊடுருவிச் சென்றன. ஜெர்மானியர்கள் ரைன் நதியிலுள்ள அணைகளை உடைத்துவிட்டு ஆர்ன்ஹெம் பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு உண்டுபண்ணிவிட்டார்கள். பிராக்கின்ஸன் என்ற கிராமம் சுத்திசெய்யப்பட்டுவிட்டது.

(2) **பிரிடிஷ் இரண்டாவது சேனை.**—குரோஷானையும் லாமர்ஸ்டார்ப்பையும் பிடித்தது.

(3) **அமெரிக்க 9-வது சேனை.**—ரோயர் நதியின் மேற்குக்கரையில் லின்னிக்கிலிருந்து இந்தி உபநதி ரோயர் நதியில் சேருமிடம் வரையிலும் பலமான ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறது. அது லிண்டெர்ன், வீட்ஸ், பிளாஸ்டார்ப், ராடார்ப்பைச் சுத்திசெய்தது. லீபார்த், லூகர்பெர்க்கைப் பற்றிவிட்டது. லின்னிக்குக்கு ஐந்து மைல்களுக்கு அப்பாலிலுள்ள ஜூலிச்கில் ஏற்பாடான எதிர்ப்பு ஓய்ந்து விட்டது.

(4) **அமெரிக்க 1-வது சேனை.**—இந்திநதியைத்தாண்டி புதிய தாக்குதலைத்துவக்கி ரேனுக்குத்தென்மேற்கில் எட்டு மைல்களிலுள்ள பெர்கன்ஸ்டீனைப் பிடித்தது. அது லூகிம், பிராண்டன்பர்க்கைக் கைப்பற்றிவிட்டது.

(5) **அமெரிக்க 3-வது சேனை.**—மெர்சிக்கிலிருந்து சாலாடர்ன் வரையிலுள்ள எல்லா பிராந்தியத்திலும் ஆதிக்கம் பெற்றிருக்கிறது. ஸார் பிரதேசத்தை சாலாடர்ன் என்னுமிடத்தில் படைகள் தாண்டிவிட்டன. அந்த நகரமும் வீழ்ச்சி பெற்றது. ஸார்பிரக்கனின் மீது வெடிகுண்டுகள் வீசப்பட்டன. படைகள் சார்யூனியன், தேடிங்க், கார்லிங்கன், எல்ஹாபிடல், முதலிய இடங்களைப்பிடித்தன. உல்லர்பாங்கனைச் சுத்தி செய்தன. ரப்லிங்க், ஹண்ட்லிங்குக்குள் புகுந்துவிட்டன.

(6) **அமெரிக்க 7-வது சேனை.**—ரைன் நதியிலுள்ள முன்னேறும்வாசல்களை ஸ்ட்ராஸ்பர்க்குக்கருகில் தாக்கி வருகின்றன. ஹூனிங் தீவும் செல்ஸ்ட்டமும் பிடிப்பட்டுவிட்டன.

(7) **பிரெஞ்சு 1வது சேனை.**—ஸ்ட்ஹிட் கணவாய் வழியாக முன்னேறி வருகிறது. அது ஷ்வீகாஸினையும், ருசனுவையும், ஆன்தீமையும் விடுவித்தது.

கிழக்குப்போர் முனை.—ருஷ்யப்படைகள் தெற்கு ஹங்கேரியில் ஆஸ்திரிய எல்லைச் சரகம் பாலடான் ஏரி, புடாபெஸ்டை நோக்கி மூன்று புதிய தாக்குதல்களைத் துவக்கியிருக்கின்றன. அவர்கள் ஹங்கேரியில் பின்கண்ட இடங்களைப் பிடித்திருக்கிறார்கள். ஷிக்ஸோ, ஷெக்ஸார்ட், காபோஸ்வர், டாம்போவர், பானிஹாட், ஸாடரால் ஜாஜெலி, மிஸகோல்க், ஷிகேட்வார், ஸ்லோபோக் பாரக்ஸ், எர்சிசி. ஸெகோஸ்லவேகியாவிலுள்ள டிரெபிசோவ் பிடிபட்டது.

யூகோஸ்லாவிய விடுதலைப்படை காக்காக்கையும், ஜிட்டையையும் பிடித்தது. யூகோஸ்லாவியாவிலுள்ள கிராஜிவோவை ருஷ்யர்களும் யூகோஸ்லாவியர்களும் ஒன்றுபட்டு விடுவித்தார்கள். அல்பேனிய விடுதலைப்படைகள் ஸ்குடாரியைப்பிடித்தன.

இதாலி.—லாமோன், மண்டோன் நதிக்கிடையே முன்னேறிய 8-வது சேனை ரன்ஸியையும் ராவென்னுவையும் பிடித்தது. 5-வது சேனை கியானெட்டோவைப் பிடித்தது. இந்தியத்துருப்புகள் ஆல்பெர்டோவைப்பிடித்தன.

பர்மா.—மியித்தாக் கணவாயிலிருந்து முன்னேறும் கிழக்கு ஆபிரிக்கப்படைகள் டாமு ரஸ்தாவும் டிட்டிம் ரஸ்தாவும் சேருமிடத்தில் சிண்ட்வின் நதியிலுள்ள கலீவா என்னும் துறைமுகத்தைப்பிடித்தன.

சீனர்கள் சைனு பர்மா எல்லைச்சரகத்திலுள்ள பாமோவுக்குக்கிழக்கில் 70 மைல்களிலுள்ள செபாங்க்கைப்பிடித்தார்கள்.

சைனு.—க்வீசௌ மாகாணத்தின் தலைநகரமான குவேயாங்குக்கு 70 மைல்களிலுள்ள ஷோன் பிராந்தியத்தில் போர்நடைபெறுகிறது. ஜப்பானியர் கைவசப்படுத்திய பாச்சை, ஷோன் இரண்டும் திரும்பவும் சீனர்வசமாகிற்று.

பசிபிக்.—லெயிடிக்கான போர் நடைபெறுகிறது. ஆர்மாக்கிலிருந்து 3 மைல்களுக்கு அப்பாலிலுள்ள தீவில் அமெரிக்கப்படைகள் இறங்கிவிட்டன. டிசம்பர் 3-ம் தேதியன்று டோக்கியோ மறுபடியும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. டிசம்பர் 7-ம் தேதியன்று மன்சூரியாவிலுள்ள மூக்டன் தாக்கப்பட்டது.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

26—11—44. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—எண்ணெய்க் கிணறுகள்.—*மெஸ்பர்க்* (Mesburg).

ரயில்வே பாலம்.—*பீல்பெல்டு* (Bielefeld).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—*ஹாம்* (Hamm).

பலமான முனைகள், போக்குவரத்து இலக்குகள்.—*டேரனின் வடக்கு* (Duren).

ரயில் தளங்கள்.—*ரெய்ட்* (Rheydt), *மஞ்சன்* (Munchen), *கிலாட்பாக்* (Gladbach), *கிரவன் பிராய்க்* (Grevenbroich).

யுத்த தளவாட உற்பத்தி.—*லாண்டு* (Landu).

தளவாடக் குவியல்கள்.—*கெய்ஸர்லாடர்ன்* (Kaiserslautern).

போக்குவரத்துகள், இதர இலக்குகள்.—*போ* (Po) *சமவெளி*.

விமானச் சண்டைகள்.—*கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.* (*பல எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன*).

இரவு.—தொழிற்சாலை இலக்குகள்—*மியூனிச்* (Munich).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—*ஜப்பானியர் ஆக்கிரமித்த பிலிப்பைன்ஸ் தீவுகள், செபு* (Cebu), *நீக்ரோஸ்* (Negros).

பர்மா (Burma).

ஸ்டேஷன், பக்கங்கள்.—*பின்மானா* (Phinmana).

பாலங்கள், முகாம்கள்.—*சிண்ட்வின்* (Chindwin).

தொழிற்சாலை.—*யீயு* (Yeu).

பாலங்கள்.—*பானோலாக்* (Banolok), *செய்னோமா* (Chienoma).

27—11—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ரயில்வே சாமான்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—*கொலோனிலுள்ள கெய்க்* (Kaik) *ஜில்லா, ஆபன்பர்க்* (Offenburg), *பிங்கன்* (Bingen).

எதிரிக் கப்பல்கள்.—*நார்வே* (Norway).

மோட்டார்ப் போக்குவரத்துகள்.—*பிரெஞ்சு இதாலிய எல்லை.*

ரஸ்தாப் போக்குவரத்துகள்.—*அல்பேனியா* (Albania), *யூகோஸ்லாவியா* (Yugoslavia).

விமானச் சண்டைகள்.—*கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.*

இரவு.—பேர்லின் (Berlin).

ரயில்வே தளம்.—*பிரெய்பர்க்* (Freiburg), மேற்கு *அரங்கத்தில்* ஒரு இடம்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி சைனியங்கள்.—*லெய்ட்டியிலுள்ள ஆர்மாக்* (Ormoc).

பர்மா (Burma).

பாலங்கள்.—*சிண்ட்வின்* (Chindwin).

கட்டடங்கள்.—*மத்திய பர்மா* (Central Burma).

28—11—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தொழிற்சாலை இலக்குகள்—*நூரம்பர்க்* (Nuremburg).

எதிரி சைனியங்கள் துருப்புகள்.—*டேரன்* (Duren).

துருப்பு முகாம்கள்—*ஜூலிக்* (Julich).

போக்குவரத்து இலக்குகள்.—*கொலோன்* (Cologne).

டாங்கிகள், ரஸ்தா வண்டிகள்.—*ஸ்ட்ராஸ்போர்க்* (Strasbourg).

ரயில்பாலம்.—*ரைன்* (Rhine), *பிரெய்ஸாக்* (Breisach).

ரயில் ஸ்தலம்.—*பிரெய்பர்க்* (Freiburg).

பாலங்கள்.—*போ* (Po) *சமவெளி*.

கப்பல்கள்.—*இதாலியிலுள்ள ஸ்பெஸியா* (Spezia).

எதிரி போக்குவரத்துகள், கட்டடங்கள், முனைகள்.—*வட இதாலி* (North Italy).

ரஸ்தா, நதிப் போக்குவரத்துகள்.—*வட மேற்கு இதாலி* (N. W. Italy).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.*

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பற்கூட்டங்கள்.—*பிலிப்பைன்ஸிலுள்ள லெயிடியின் மேற்கு கடற்கரை.*

விமானத் தாக்குதல்கள்.—*வல்கனோ தீவுக் கூட்டத்திலுள்ள இவோஜிமா* (Iwojima).

இதர இலக்குகள்.—*போனின்* (Bonin), *பாகா* (Pagau), *மாரியானஸ்* (Marianas), *மார்ஷல்ஸ்* (Marshall) *தீவுக்கூட்டங்கள்.*

பர்மா (Burma).

ஜப்பானிய சேமிப்புகள்.—*மாண்டலே* (Mandalay).

பாலங்கள்.—*மத்திய பர்மா* (Central Burma).

29—11—44. (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—எண்ணெய்க் கிணறுகள்.—*மிஸ்பர்க்* (Misburg).

ரயில் தளம்.—*ஹாம்* (Hamm).

இலக்குகள்.—*டார்ட்மண்ட்* (Dortmund).

எண்ணெய்க் கிணறுகள்.—*லீப்ஸிக்* (Leipzig).

ரயில்வே தளவாடங்கள் தயார்செய்துசேமிக்கு மிடங்கள்.—ஸார்பிரக்கன் (Saarbrucken).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—வட இதாலி (Northern Italy).

கப்பல்கள்.—வெனிஸ் (Venice) வளைகுடா.

போக்குவரத்துகள்.—வடமேற்கு இதாலிய (N. W. Italian border) எல்லை.

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.–இலக்குகள்.–ஹனோவர் (Hanover).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

தூரக்கிழக்கு (Far East).

கப்பற்கூட்டம்.—லெய்ட்டி (Leyte).

விமான நிலயம்.—லூஸானிலுள்ள லெகாஸ்பி (Legaspi).

கப்பல்கள்.—வட செபு (N. Cebu).

விமான நிலயங்கள்.—டாவாவோ (Davao).

எதிரி சைனியங்கள்.—டிமோர் (Timor), கெய் (Kai), பாண்டா (Banda).

தொழிற்சாலை இலக்குகள்.—டோக்கியோ (Tokyo).

பர்மா (Burma).

பாங்காக்-நாய் (Bangkok-Noi), பர்மா (Burma), சியாம் (Siam) ரயில்வே லயனியுள்ள ரயில்வே ஸ்டேஷன்கள்.

உதவி.—பாமோவிலுள்ள தரைப்படைகள்.

பாலம்.—ரங்கூன் (Rangoon), மாண்டலே (Mandalay) ரயில்வே.

30—11—44 (வியாழக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—ஜெர்மன் கப்பல்கள்—பிரிஸியன் (Frisian) தீவுகள்.

"V-2" தாக்கும் இடங்கள்.—ஹாலந்து (Holland).

3 பென்ஸின் நிலயங்கள்.—ஆபர்ஹாஸன் (Oberhausen), பாட்ராப் (Bottrop), டீயிஸ்பர்க் (Duisberg).

முனைகள், துருப்பு முகாம்கள் –டூரேன் (Duren).

பாலங்கள்.—மிலான் (Milan).

ரயில்கார்கள், மோட்டார் போக்குவரத்துகள்.- போ (Po) சமவெளி.

இரவு.—இலக்குகள்–டீயிஸ்பர்க் (Duisburg), ஹாம்பார்ன் (Hamborn), ஹாம்பர்க் (Hamburg).

விமான நிலயங்கள்.—மேற்கு யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

விமான நிலயம்.—ஹெஹோ (Heho).

பாலம்.—டோம்போ (Tombo).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

1—12—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—எதிரித் துருப்புகள், மோட்டார் நிலயங்கள், முனைகள்—பால் (Baal), ரூரிச் (Rurich), கிலம்பாக் (Glimbach), கீவனிச் (Gevenich).

ரயில்வே போக்குவரத்து.—ஹாலந்து (Holland).

டாங்கிகள் -போயர் (Poer), இண்டன் (Inden).

ரிப்பேர் செய்யும் டெப்போக்கள்.—கிமண்ட் (Gemund).

பென்ஸால் தொழிற்சாலை.—டீயிஸ்பர்க் (Duisberg), பெட்டார்ப் (Bettrop).

ரயில்வே தளங்கள்.—ஷ்வெய்பிரக்கன் (Zweibrucken).

பலத்த முனைகள்.—டன்கர்க் (Dunkirk).

போக்குவரத்துகள்.—பிரென்னர் பாஸ் (Brenner Pass), போ (Po) சமவெளி.

கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic), ஸ்பெசியா (Spezia).

பாலங்கள்.—வட இதாலி (North Italy).

விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—இலக்குகள்–டீயிஸ்பர்க் (Duisberg).

எதிரி தளம்.—கார்ல்ஸ்ரூகி (Karls ruhe).

தூரக்கிழக்கு (Far East).

ஸப்ளை தளங்கள், எதிரி போக்குவரத்துகள்.–ஆர்மாக் (Ormoc) வளைகுடா.

பெரிய ஸ்தலம்.—காமாடீஸ் (Camotes).

விமான நிலயம்.—மிண்டானோவிலுள்ள மாதினா (Matina).

ராணுவ நிலயங்கள்.—ஸெலபஸ் (Celebes).

எதிரி சைனியங்கள்.—கெய்ரிரு (Kairiru) தீவு.

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

2—12—44 (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—பெரிய தொழிற்சாலை கட்டடம்.—வென்லூ (Venloo).

"V-2" சேமிப்பு நிலயங்கள்.—ஹாலந்து (Holland).

வேலைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—ஜெர்மனியிலுள்ள காப்லென்ஸ் (Coblenz).

ஹன்ஸாபென்ஸால் தொழிற்சாலை.—டெர்ட்மண்டு (Dertmund).

பலத்த முனைகள் கோட்டைகள்.—ஸார்லாடன் (Saarlautern), ஸார்பிரக்கன் (Saarbrucken).

பாலங்கள், ரயில்வே லயன்கள், ரயில் கார்கள், டாங்கிகள், மோட்டார் போக்குவரத்துகள், பீரங்கிகள்.—வட இதாலி.

கப்பல்கள் வெனிஸ் (Venice).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—தாய்லாந்திலுள்ள பாங்காக் (Bangkok).

ஜப்பானிய சைனியங்கள்.—ஆர்மாக் (Ormoc).

பர்மா (Burma).

ரயில்வே.—பின்மானா (Pyinmana).

எதிரி சைனியங்கள்.—சிண்ட்வின் (Chindwin).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

27—11—44. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

ருஷ்யா (Russia).

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

28—11—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள் தரைமீதுள்ள ஸ்தாபனங்கள்.—பிலிப்பைன்ஸிலுள்ள லெய்ட்டி (Leyte).

29—11—44. (புதன்கிழமை);

30—11—44. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

1—12—44. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

இலக்குகள்.—தென் இங்கிலாந்து (South-England).

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

2—12—44. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain),

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

3—12—44 (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain),

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.

ருஷ்யா (Russia),

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேச சைனியங்கள்.—வட லெய்ட்டி (North Leyte), ஆர்மாக் (Ormoc).

யுத்தக் குறிப்புகள்.

டிஸம்பர் 7.— இந்தத் தேதி மூன்று வருஷங்களுக்கு முன் ஜப்பானியர் செய்த துரோகத்தை ஞாபகப்படுத்துகிறது. அன்று ஜப்பானிய ஸ்தானிகர்கள் வாஷிங்டனில் சம்பாஷணையை நடத்தி வந்தபொழுது விமானிகள் பெர்ல் துறைமுகத்திலுள்ள அமெரிக்கக் கப்பல்கள்பேரில் குண்டுகளை வீசினார்கள். அதே சமயத்தில் ஹாங்காங், குவாம், வேக், மிட்வே, பிலிப்பைன்ஸ், மலேயா முதலிய இடங்களையும் தாக்கின. ஹிட்லர் ஐரோப்பாவில் பாய்ந்தபொழுதே அதாவது இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே இந்தத் தாக்குதல் திட்டம் போடப்பட்டுத் தயார் செய்யப்பட்டிருந்தது. நேசதேசத்தார்கள் மற்றொரு பக்கத்தில் போர்புரிந்துகொண்டிருந்தபொழுது ஆசியாவை விழுங்கிவிடுவதென்று ஜப்பான் உத்தேசித்தது.

ஜப்பான் ஒன்று நினைக்க தெய்வம் மற்றொன்று நினைத்துவிட்டது. ஜப்பானிய வஞ்சக புத்தியின் காரணமாக அமெரிக்கா போரில் கலந்துகொண்டது. அதன் பூரா ஐஸ்வர்யங்களும் நமக்குக் கிடைத்தன. உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் மேற்கிலும், கிழக்கிலும் அக்கிரம ஆக்கிரமணத்தை ஒழிக்க ஒன்று சேருவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஆசியா பூராவிலும் ஆதிக்கம் பெறுவதென்று யோஜித்து ஜப்பான் போரைத் துவக்கி இன்று மூன்று வருடங்கள் முடிந்துவிட்டன. எல்லா முனைகளிலும் தெய்வீகக் காற்றினால் வெற்றிகள் கிடைக்குமென்றும் அது நம்பியிருந்தது. ஈஸ்வர சங்கல்பம் வேறுவிதமாக இருக்கிறது. நேசதேச சுழல்காற்று வீசி ஜப்பானியர்களை ஒவ்வொரு தீவாகக் காலி செய்யும்படி செய்துவிட்டது. இந்தக் காற்று இப்பொழுது ஜப்பானுக்கும் பரவிவிட்டது. அங்கும் வெடிகுண்டு மாரி பொழியப்படுகிறது.

மூன்று வருடங்களுக்கு முன் ஜப்பான் பெர்ல் துறைமுகத்திற்கும், பிரின்ஸ்ஆப்வேல்ஸுக்கும், ரிபல்ஸுக்கும் ஆகாயப்படை சக்தியைக்கொண்டு தீங்கிழைத்தது. இன்று ஜப்பானிய விமானப் படை பஸிபிக் ஆகாயத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டுவிட்டது. நேசதேச சூபர்பறக்கும் கோட்டை விமானங்கள் ஜப்பானையே தாக்கும் நிலமை ஏற்பட்டுவிட்டது.

இன்று ஜப்பான் பீத்திக்கொண்ட கடற்படை கொஞ்சம் கொஞ்சமாக அழிவுற்று ஒளிந்து கொண்டிருக்கிறது.

ஜப்பான் இப்பொழுது தேசங்களைக் கைப்பற்றுவதற்கில்லாமல் பிழைத்திருக்கப் போர் புரிந்து வருகிறது. லெயிடித்தீவில் ஒரு அமெரிக்கரைக் கொன்று காலஹரணம் செய்ய 13 ஜப்பானியர்கள் காவு கொடுக்கப்படுகிறார்கள். ஜப்பானை நேசதேசத்தார்கள் படையெடுக்கும்பொழுது அதை சமாளிக்க தற்காப்புகளை அமைக்கவும், விமானங்களைக் கட்டி முடிக்கவும் ஜப்பானுக்கு அவகாசம் தேவை. ஜப்பானிய ஸோல்ஜர் சாகும் வரையில் போர் புரிந்தாலும் அவன் நேசதேசத்தாரின் ஸோல்ஜரின் கவம்பூண்ட பலத்தையும் தீரத்தையும் சமாளித்து நிற்கமுடியாது.

ஜப்பானை அடிக்கும் வேலையில் இந்தியாவும் ஒரு பங்கெடுத்துக்கொண்டிருக்கிறது. டில்லிக்குப் போவது என்ற பயித்தியம் பிடித்த முயற்சியை மேற்கொண்டு ஜப்பான் இந்திய எல்லைச் சரகத்தைத் தாண்டியபொழுது இந்திய வீரர்கள் அதைக் கண்டித்துவிட்டார்கள். இன்று அவர்கள் பிரிடிஷ், சீனா, கிழக்கு ஆபிரிக்கப்படைகளுடன் ஒன்றுபட்டு எதிரிகளை மத்திய வடக்கு பர்மாவில் துறத்தியடித்துவருகிறார்கள்.

வி வி வி வி வி

70 வயதுள்ள யுவர். மிஸ்ட்டர் சர்ச்சிலுக்கு 70 வயதாகிவிட்டது. நவம்பர் 20-ம் தேதியன்று அவர் 70 வயதுள்ளவர்கள் கோஷ்டியில் சேர்ந்துவிட்டார். அவருடைய நாட்டாரும், அவர் விடுவிக்க உதவிய மற்ற தேசத்தார்களும் அவரைப் பாராட்டவேண்டும். பலமான ஊக்கமும், யுத்த வீரமும், அகமகிழ்ச்சியும், சிறந்த நண்பனும் எடுத்துக்கொண்ட காரியத்தில் வட துருவ நக்ஷத்திரத்தைப்போல் உறுதியுமுள்ள மிஸ்ட்டர் சர்ச்சில் உலகத்தின் நம்பிக்கைக்கு ஆஸ்பதமாக இருக்கிறார். உலகம் பூராவும் ஏற்கனவே கிடைத்த வெற்றிகளைக்கண்டு குதூகலப்படுவதுடன் கூடிய சீக்கிரத்தில் சமாதானம் ஏற்படுமென்று நம்பிக்கையுடனிருக்கிறது. சர்ச்சில் ராஜதந்திர சொற்பொழிவாளரும் ஸோல்ஜருமாதலால் அவரை தோத்திரம் செய்கிறவர்கள் அவரை ஸீஸருக்கும் நெபோலியனுக்கும் ஒப்பிட்டுச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர் மற்ற இருவர்களைப்போலும் ராணுவ மேதாவி இல்லை.

அவர் ஒரு சமயம் ஸோல்ஜராக வேலை செய்தபோதிலும் அவருக்கு சிப்பாய்த் தொழில் இல்லை. மேலும் அவர் ஜெனராலுமில்லை. ஆகிலும் அவருடைய நுட்பபுத்தியும் துணிவும் தான் பிரிடனுக்கு ஆபத்து ஏற்பட்டிருந்தபொழுதும், பிரிடிஷ் படைகளை ஆபிரிக்காவுக்கு அனுப்பி சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றும் பொழுதும் யுத்த தந்திரத்தை நிறுவின. ஆனால் அந்த மூவருக்கும் சில அம்சங்களில் சாம்யமும் உண்டு. மிஸ்ட்டர் சர்ச்சிலிடம் அபாரமான சக்தியும் பொதுமக்களை உற்சாகப்படுத்தும் சக்தியுமிருக்கின்றன. ருஷ்யா, அமெரிக்கா போன்ற பல்வேறு தேசங்களையும், ஸ்டாலின், ரூஸ்வெல்ட், டிகால் போன்றவர்களையும் அவர் ஒன்று கூட்டக்கூடிய சக்திபெற்றவர். அவர்களைப்போல மிஸ்ட்டர் சர்ச்சிலும் உலக ரக்ஷகர். அவருடைய வாழ்க்கை ரம்யமானது. அவருடைய சரித்திரத்தை எழுதுகிறவர் அவரைப் பற்றி 25 சம்பவங்களை வெளியிட்டிருக்கிறார். தெய்வ கிருபையால் இந்த நெருக்கடியான சமயத்தில் உலகத்திற்கு வழிகாட்ட அவர் ஜீவதசை நீடிக்கப்பட்டிருக்கிறது. அவரை விருத்தரென்று சொல்லக்கூடுமோவென்று சந்தேகமாக இருக்கிறது. அவரை காரணமில்லாமல் மனித மீன் வெடி என்று அழைக்கவில்லை.

அவருடைய அபாரமான ஊக்கம் அவருடைய கூட்டாளிகளுக்கும், அவருடைய டாக்டர்களுக்கும் சங்கடத்தை உண்டுபண்ணும். அவருடைய 70-வது வருஷ விழாவை அமைதியுடன் கொண்டாடினார். அந்த சமயத்தில் அவர் அட்லாண்டிக் கடலையோ அல்லது பஸிபிக் கடலையோ கப்பலில் தாண்டியோ, அல்லது போர்முனையில் புகையும் பீரங்கி பிரயோகமும் உள்ள சமயத்தில் ஜீப்பில் போவதற்கும் சமானமாக இந்த வைபவத்தைச் சொல்லலாம். டைம்ஸ் பத்திரிகை சொல்லுகிறபடி அவரை 70 வயதுள்ள வாலிபர் என்று சொல்லலாம்.

வி வி வி வி வி

கீர்த்தியுள்ள ஜனங்கள். நெருக்கடியில் உத்தம புருஷர் தோன்றினார். ஆகிலும் சர்ச்சிலின் நாயகத்தைப் பாராராட்டிவிட்டு நெருக்கடியான சமயத்தில் மன்னர்களைப்போலும் தீரர்களைப்போலும் நடந்துகொண்ட தைரியமுள்ள பிரிடிஷ் மக்களையும் பாராட்டாவிட்டால் நாம் செய் நன்றி மறந்ததாகும். பிரிடிஷ் அறிக்கை மந்திரியான மிஸ்ட்டர் பிரெண்டன் பிராக்கன், மிஸ்ட்டர் சர்ச்சிலின் பிறந்த தினத்தன்று ஐந்தாவது வருஷ யுத்தத்தில் பிரிடன் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப்பற்றி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். இந்த வருஷத்தில் பிரிடன் அபாரமான தியாகத்தையும்

முயற்சியையும் மேற்கொண்டிருக்கிறது. பிரிடனைப்போல் மற்றெந்த நாடும் பிரிடனைப் போல் தியாகங்களைச் செய்யவில்லை. அவ்வளவு கஷ்டங்களையும் அனுபவித்ததில்லை. ஆகிலும் பிரிடன் அவைகளைப்பற்றி ஆடம்பரம் செய்யவில்லை. ஓயாத குண்டுவீச்சிலும், திக்கிறையான வீடுகளில் வசித்துக்கொண்டும், சந்தோஷமுள்ளவர்களையும் துக்கத்தில் ஆழ்த்திவிடக்கூடிய பந்துக்களின் சாவையும் சகித்துக்கொண்டும், இங்கிலாந்திலுள்ள பொது மக்கள் தானாகவே படைகளில் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். பிரதம மந்திரி ரத்தம், பரிசிரமம், அனுதாபம் என்று கர்ஜித்தபொழுது பொதுஜனங்கள் சந்தோஷத்துடன் ஏராளமான வரி விகிதங்களை ஒப்புக்கொண்டார்கள். சேனைக்கும் உள்நாட்டுப் படைக்கும் மிலியன் கணக்கான ஆட்களைச் சேர்த்தார்கள். மற்ற தேசங்களைவிட மிகுதியான யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்கிறார்கள். அதாவது 1,00,000 விமானங்கள், 6,000 கப்பல்கள், 4 மிலியன் யந்திர பீரங்கிகள், 8,000 வெடிகுண்டுகள் உற்பத்தி செய்யப்பட்டன. மேலும் அவர்கள் ஏற்றுமதிப் பொருள்கள் 20 சத விகிதம் குறைத்துக்கொண்டு 19 மிலியன் ஏகராவை சாகுபடிக்குக் கொண்டுவந்து உணவுப்பொருள்களை அதிகப்படுத்தினார்கள். கடல் தாண்டி இருந்த ஆஸ்திப்பொருப்பான 1,065 மிலியன் பவுன்களை விற்றார்கள், 2,300 மிலியன் பவுன்கள் புதிய கடன் வாங்கினார்கள்.

மொத்தமாக பிரிடன் 25,0000 மிலியன் பவுன்களைச் செலவிட்டிருக்கிறது. பிரிடன் இன்னும் அதிக யுத்த முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று குறைகூறுகிறவர்களுக்கு அறிக்கை இலாகா மந்திரி வெளியிட்டிருக்கும் அறிக்கைத் தகுதியாக பதிலுரைக்கிறது. பிறருடைய அனுதாபத்தைப்பெற இந்த அறிக்கை வெளியிடப்படவில்லை. சாவதானமாகப் போரில் இறங்கக்கூடிய ஒரு ஜனநாயகம் தயாராக இல்லாதிருந்தாலும் நெருக்கடி ஏற்படும் பொழுது எவ்வித முயற்சியை மேற்கொண்டு நல்ல தயாரிப்புள்ள எதிரிகளை எவ்விதம் முறியடிக்க முடியுமென்பதைத்தான் அது வெளிப்படுத்துகிறது.

வி வி வி வி வி

குத்தகைக் கடன் திட்டமும் அதற்கு பர்த்தி நடவடிக்கையும். இந்த திட்டங்கள் நேசதேசத்தாரால் யுத்த அவசியத்தை ஒட்டி ஏற்படுத்தப்பட்டவை. அமெரிக்கா குத்தகைக் கடன் திட்டத்தை ஆரம்பித்தது. அதற்குப் பதில் முறையை பிரிடன் துவக்கிற்று. பிரிடனுக்கு அமெரிக்கா சாமான்களை அனுப்பியதுபோல் பிரிடனும் அமெரிக்காவின் தற்காப்புக்கு பதில் முறையில் உதவி செய்து வந்தது. இந்த உண்மைகள் நவம்பர் 24-ம் தேதியன்று இரு நாடுகளும் வெளியிட்ட தஸ்தாவேஜிகளிலிருந்து புலப்படுகின்றன. அமெரிக்காவின் ரிப்போர்டில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பிரிடன் செய்த பேருதவியை ஒப்புக்கொண்டு பின்வருமாறு எழுதியிருக்கிறார். "பிரிடன் உதவி செய்யாதிருந்தால் பிரான்ஸில் படையெடுப்பு அநேக மாதங்கள் வரையில் தாமதப்பட்டிருக்கும். பிரிடன் நமது படைகளுக்கு அளித்த சாமான்களை அமெரிக்காவிலிருந்து கொண்டுபோக நாம் 1,000 கப்பல்களைக் கடல்தாண்டி அனுப்பியிருக்கவேண்டும்." 1942-ம் வருஷம் ஜூன் மாதம் முதல் 1944-ம் வருஷம் ஜூன் மாதம் முடிய பிரிடன் அமெரிக்காவுக்கு 2,437,062,000 டாலர்கள் பொருமானமுள்ள சாமான்களை அனுப்பியிருக்கிறது. இந்தச் சமயத்தில் பிரிடனிலிருந்த அமெரிக்கப் படைகளும் £ 6,800,000 பொருமானமுள்ள சாமான்களைப் பெற்றிருக்கின்றன. இந்தக் கணக்கில் பிரான்ஸில் அமைக்கப்பட்ட சேர்மானத் துறைமுகங்களின் பொருமானம் சேர்க்கப்படவில்லை. பர்மா இந்தியாப் போர்முனையில் பிரிடனும் இந்திய நிர்வாகமும் அமெரிக்காவுக்கு 232,616,006 டாலர்கள் (Rs. 76·6 கோடிகள்) பொருமானமுள்ள சாமான்களைத் தந்திருக்கின்றன. இந்தியாவில் மட்டும் தளங்களையும், முகாம்களையும் மற்ற வசதிகளையும், பெட்ரோலையும் 78,000,000 டாலர்கள் (25·6 கோடி ரூபாய்கள்) பொருமானமுள்ள அளவிற்கு ஸப்ளை செய்திருக்கிறது. மேலும் இந்தியாவில் உள்ள அமெரிக்கத் துருப்புகளுக்கு இந்தியா 200 மிலியன் ராத்தல் எடையுள்ள உணவுப் பொருள்களை ஸப்ளை செய்திருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்கள் யுத்தத்தில் இந்தியா எடுத்துக்கொண்டிருக்கும் பங்கை வெளிப்படுத்துகின்றன.

வி வி வி வி வி

மேற்குப் போர்முனை. ஆண்ட்வெர்ப் துறைமுகத்திற்கும் பெரிய சாமான் கப்பல்கள் தாராளமாகச் செல்லலாம். ஷெல்ட் நதி முகத்துவாரத்திலுள்ள 70 மைல்கள் கொண்ட ஒரு கால்வாயிலுள்ள சுரங்க வெடிகளை அகற்றி இந்த வெற்றி ஏற்பட்டது. இந்தப் போர்முனையில், ஜெனரல் ஐசன்ஹவர் சொன்னபிரகாரம், பூராவிலும் பலமான தாக்குதல் நடத்தப்படும். அப்பொழுது எதிரியின் தற்காப்புகள் விஸ்தாரப்பட்டு நொருங்கிவிடுமென்று கருதப்படுகிறது. ரைன் நதி பாயும் பிரதேசத்திலும் ரூர், ஸார்பள்ளத்தாக்கிலும் கடும்போர் நடைபெறுகிறது. ரைன் நதிப் பிரதேசத்தில்தான் ஜெர்மனியின் யுத்த தளவாட உற்பத்திக்குறிய நிலக்கரி, இரும்புச் சுரங்கங்களிருக்கின்றன.

ஸார் பள்ளத்தாக்கு தொழிற்சாலே உள்ள பிரதேசம் என்பதில் அவ்வளவு முக்கியத்துவ மில்லாதபோதிலும் அதுவும் உபயோகமுள்ள பாகம்தான்.

வடக்கில் பிரிடிஷ் இரண்டாவது சேனே வென்லூயி முன்னேறும் வாசலே அடைந்து விட்டது. அதைப் பிடித்தபின் அது ரூர் நதி ரைன் நதியில் சங்கமமாகும் இடத்திலுள்ள டூயீஸ்பர்க்கை நோக்கி முன்னேறும் அமெரிக்க 9-வது 1-வது படையுடன் ஒன்றுபட்டு அதன் பகுதியிலுள்ள ரைன் நதி மார்க்கங்களேயும் அது முற்போக்காகத் தாக்கி வருகிறது. ஜூலிக்கில் எல்லா எதிர்ப்பும் நின்றுவிட்டது.

ஸார் பள்ளத்தாக்கில் இரண்டு வாரங்களுக்குமுன் நேசதேசப்படைகள் ஸ்டாரஸ்பர்க்கு என்னுமிடத்தில் ஊடுருவிச்சென்றபின் முன்னேறிவருகின்றன. இங்கு சார்லாடர்ன் விழுந்துவிட்டது. நேசதேசப்படைகள் சார்பிரக்கனிலிருந்து 6½ மைலுக்குள் வந்துவிட்டன.

ஸ்டார்ஸ்பர்க்கிலுள்ள 7-வது சேனேயும் தெற்கு நோக்கி முன்னேறிவருகிறது. பிரெஞ்சு முதல் சேனேயுடன் ஒன்றுசேர்ந்து அவைகள் பெல்போர்ட் இடைவெளியிலுள்ள 50,000 ஜெர்மானியர்களே நெருக்கிவருகிறது. அவர்கள் கோல்மாரிலுள்ள ஜெர்மன் தற்காப்பு நிலேயத்திலிருந்து சமீப தூரத்திலுள்ள ஸெலஸ்டாட்டிக்குள் ஊடுருவிச் சென்றுவிட்டார்கள். பிரெஞ்சுப் படைகள் மல்ஹௌஸுக்கும் பெல்போர்ட்டுக்கும் மத்தியில் ரைன்—ரோன் கால்வாயைத் துண்டித்துவிட்டார்கள்.

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனே. வடக்குப் பகுதியில் பருவகாலத்தின் அசௌகரியம் நடவடிக்கைகளே பாதிக்கிறது. ஆனல் தெற்குப் பகுதியில் ஸெகோஸ்லவேகியாவில் கார்பேதியன் மலேகளிலுள்ள டுக்லா கணவாயிலிருந்து ஆஸ்திரியாவின் எல்லேச் சரகம் வரையில் பிறைவடிவமான ஒரு போரைத் துவக்க திட்டங்கள் தயாராகிவருகின்றனவென்று புலப்படுகிறது. இந்தப்பிறை பால்டிக்கிலிருந்து அட்ரியாடிக் வரையிலுள்ள வளேயத்துடன் சேர்ந்துவிடும்.

ருஷ்யர்கள் டான்யூப் நதியைத்தாண்டி யூகோஸ்லாவியா எல்லேச் சரகத்தில் ஆஸ்திரியாவுக்குச் செல்லும் நோக்கத்துடன் ஒரு புதிய தாக்குதலே ஆரம்பித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

வி வி வி வி வி

பர்மா. பிரிடிஷ் 14-வது படையிலுள்ள கிழக்கு ஆபிரிக்கப் படைகள் சிண்ட்வின் நதியிலுள்ள களிவாவைப் பிடித்தன. சீனப் படைகள் பர்மா ரஸ்தாவிலுள்ள செபாங்கை பிடித்தனர். ஆனல் இந்த ரஸ்தாவுக்குப் புதிய அபாயம் நேரிட்டுவிட்டது. குவாங்ஸியிலுள்ள அமெரிக்க தளங்களேப் பிடித்துக்கொண்டு ஜப்பானியப்படைகள் சுங்கிங்குக்குத் தெற்கிலுள்ள பர்மா ரஸ்தாவிலிருக்கும் குவேயாங்கை நோக்கி முன்னேறிவருகிறார்கள்.

வி வி வி வி வி

பிரெஞ்சு-ருஷ்ய ஒப்பந்தம். பிரான்ஸ் புதிய நிர்வாகத்தைத் திறமையுடன் நடத்திவரும் ஜெனரல் டிகால் ருஷ்யாவுடன் 20 வருஷ ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள மாஸ்கோவுக்குச் சென்றிருக்கிறார். கஷ்ட அனுபவத்திற்குப் பின் பிரான்ஸின் எதிர்கால பத்திரம் இவ்விதமான ஒப்பந்தத்தைப் பொருத்ததென்று அது அறிந்துவிட்டது. பிரான்ஸின் முரட்டு சுவபாவமுள்ள அண்டைவீட்டுக்காரனை ஜெர்மனியை அடக்கியாள ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டாலொழிய, மேற்கிலும் கிழக்கிலுமுள்ள மற்ற எந்த சிறிய நாட்டுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டால் பயன்படாதென்று இப்பொழுது வெளியாகிவிட்டது.

இந்த உண்மையை அறிந்தே பிரிடனும் ஐரோப்பிய பத்திரத்துக்காக ருஷ்யாவுடன் 20 வருஷ ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. ஜெர்மனியை அடக்குவதற்கு இருபுரத்திலும் போர் மூளுமென்ற பீதி ஜெர்மனிக்கு ஏற்படவேண்டும். ஆகையால் பிரிடனேப்போல் பிரான்ஸும் ருஷ்யாவின் நட்பைப் பெருமலிருக்கமுடியாது.

வி வி வி வி வி

புதுக்கோட்டையில் யுத்த முயற்சிகள். தபால்மூலமாக நெசவுத் துணியையும், நூலேயும் அனுப்பக் கூடாதென்று புதுக்கோட்டை நிர்வாகம் ஒரு உத்திரவை பிறப்பித்திருக்கிறது. இந்த உத்திரவுப்படி புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள எந்த போஸ்டாபீஸும் அந்தப் பார்ஸல்களே வாங்கக்கூடாது. எவரும் அவ்வித பார்சலே புதுக்கோட்டை ஸமஸ்தானத்திற்குள்ளேயோ அல்லது வெளிநாடுகளுக்கோ அனுப்பும்படி போஸ்டாபீஸில் கொண்டுபோய் கொடுக்கக் கூடாது.

கிரீஸ். விடுதலைக்குப்பின் ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகளில் அராஜகம் ஏற்படாதென்று நினைத்தோம். கிரீஸின் சம்பவங்கள் நமது நம்பிக்கையைப் பொய்யாக்கிவிட்டன. இடதுசாரி இயக்கமான E.A.M.ம், கிரேக்க விடுதலை முனை ராணுவமுமான U. L. A. S.-ம் கிரீஸின் விடுதலைக்கு முக்கியமான காரணமாகயிருந்தன. அவைகள் இப்பொழுது நிர்வாகத்துடன் சச்சரவைத் துவக்கிவிட்டன. ஞாயிறன்று கிரேக்கத் தலைநகரில் கோரமான சம்பவங்கள் நிகழ்ச்சி பெற்றன. போலீஸ்காரர்கள் இந்த கோஷ்டிகளின் பேரில் சுட்டார்கள். அவர்களும் திரும்பிச் சுட்டார்கள். கிரேக்கஜெனரல் ஆதென்ஸிலும், பிரேயஸ் துறைமுகத்திலும் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார். பிரிடிஷ் படைகள் ஒழுங்கு முறையை நிலைநாட்டி வருகின்றன. ஆதென்ஸிலுள்ள எல்லாக் கடைகளும் மூடப்பட்டுவிட்டன. தண்ணீர் ஸப்ளையைத் தவிர பாக்கியுள்ள எல்லா பொதுஜன அமைப்புகளும் சீர்கெட்டுப் போய்விட்டன.

இந்த சம்பவத்தைப்பற்றி காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் வருத்தத்துடன் பேசியபொழுது விடுதலை பெற்றபின் வெகு சீக்கிரத்திலும் பசியால் வாடும் ஜனங்களுக்கு உணவுப்பொருள்களை வழங்க ஏற்பாடுகள் செய்துவரும்பொழுதும் கிரீஸில் இந்த சம்பவங்கள் நேரிட்டனவென்பது துக்கிக்கத் தகுந்தது. அவர் மேலும் சொன்னதாவது:—நமது நிலைமை தெளிவானது. கிரேக்கர்கள் மன்னர் ஆக்ஷியையோ அல்லது குடியரசையோ அமைத்தாலும் அது அவர்கள் செய்துகொள்ளவேண்டிய முடிவு. அவர்கள் ஜனநாயக ஆக்ஷியையோ பிரபுக்கள் ஆக்ஷியையோ ஏற்படுத்தினாலும் நாம் தலையிடப்போவதில்லை. ஆகிலும் அவர்கள் ஒரு முடிவுக்கு வரும்வரையில் கிரீஸிலுள்ள ஏராளமான பிரிடிஷ் படைகள் அங்கு அமைதியை ஏற்படுத்த எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளும்.

வி வி வி வி வி

சேமிப்பு பக்ஷம். டிஸம்பர் 1-ம் தேதியன்று மாக்ஷி தங்கிய மதராஸ் கவர்னர் அந்த மாகாணத்தில் சேமிப்பு பக்ஷத்தை ஆரம்பித்தார்கள். அவர் இந்தச் சிறிய முதலீடுகள் புத்திசாலித்தனமானவை, தேசபக்தியுள்ளவையென்றும் அறிமுகப்படுத்தியிருக்கிறார். அவர் பின்வருமாறு பேசினார்.

இப்பொழுது செலவிடப்படும் பொருள் வியர்த்தமானதென்று எல்லோரும் அறிவார்கள் இப்பொழுது நாம் தங்கத்தை வாங்கினால் சில வருஷங்களில் அதன் பொருமானம் பாதி அளவிற்குக் குறைந்துவிடும். இப்பொழுது மீதப்படும் பொருளை தற்காப்புப் பத்திரங்களிலும், தேசிய சேமிப்பு பத்திரங்களிலும் முதலீடுசெய்தால் அவைகளுக்கு யுத்தத்துக்குப்பின் அதிகமான பொருமானம் கிடைக்கும். நமது பிற்காலத் தேவைகளுக்கும் நாம் பொருள் ஒதுக்கிவைத்ததாக ஆகும்.

யுத்தத்தில் அதிக வருமானம் பெற்றுவருகிறவர்களும், அதிக வரி விகிதங்களால் பாதிக்கப்படாதவர்களும் கொஞ்சம் கொஞ்சமாக சேமிப்பு செய்வதைத்தூண்ட நாங்கள் விசேஷ முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இங்கு கூடியிருக்கும் எல்லோரையும் கூடுமான வரையில் ஜனங்கள் பொருளைச் சேமிக்கவேண்டுமென்று வற்புறுத்துமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். ஒவ்வொருவரும் ஒரு சிறிது சேமித்தாலும் மொத்தத்தில் அதிகப்பொருள் குவித்துவிடும். இந்தியாவிலுள்ள ஆடவரும், ஸ்திரீயும், குழந்தையும் ஒரு மாதத்தில் 3½ அணா மீதப்படுத்தினால் செல்வப்பெருக்கைக் குறைக்கப் போதுமான பணத்தை சேமித்துவிடலாம். சிறிய சேமிப்பு திட்டம் யுத்தகாலத்துக்கு ஏற்பட்டதல்ல. அது புனருத்தாரண திட்டம். ஏழ்மைத்தனமுள்ள இந்தியாவை செல்வப்பெருக்குள்ள நாடாகச் செய்வதுதான் அதன் நோக்கம். சேமிப்புப் பத்திரங்கள் குறைந்தபக்ஷம் 10-ருக்கு வாங்கலாம். வெகு சீக்கிரத்தில் ஐந்து ரூபாய் பொருமானமுள்ள பத்திரங்களும் வெளிவரும். 5 ரூபாய் ஸர்ட்டிபிகேட்டுகள் சிறிய தொகைகளைப்போட்டு திருப்பிக்கொள்ளுகிறவர்களுக்கு அனுகூலமுள்ளதாக இருக்கும். அவைகளை 18 மாதங்களுக்குப்பின் பணமாக்கிவிடலாம்.

"மதராஸ் மாகாணத்தில் இவ்வருஷ சேமிப்பு லக்ஷியம் 20 கோடி ரூபாய்கள். நவம்பர் 25-ம் தேதிவரையில் நாம் 7,91,00,000 ரூபாய்களை சேமித்துவிட்டோம். இந்திய இம்பீரியல் பாங்கியின் மதராஸ் கிளை இன்று 2 கோடி ரூபாய்களை முதலீடு செய்திருப்பதாக எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. மீதப்படுத்துவதன்மூலம் செல்வப்பெருக்கு குறையுமென்றும், வாழ்க்கைச் செலவு குறையுமென்றும், தேசிய க்ஷேமத்திற்கு அது அத்தியாவசியமென்றும் நான் சொல்லிவிட்டேன். சமீப எதிர்காலத்தில் வரப்போகும் சமாதான காலத்தில் நாம் மீதப்படுத்தும் பொருள் நமக்கும் நமது நாட்டிற்கும் உபயோகமுள்ளதாக இருக்கும்."

உண்மைகளுக்கு அதிகமாக நாம் மதிக்கவேண்டாம்.

மேற்குப் பக்கத்திய தாக்குதலைப்பற்றி

(கார்டியன் பத்திரிகை.)

மேற்குப்போர்முனை நடவடிக்கை திருப்திகரமாக நடைபெறுகிறது. அது இனிது முடியுமென்றும் தோன்றுகிறது. ஆகிலும் நாம் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கும் வரக்கூடாது. ரைன் நதிக்கு மேற்குப்பக்கத்தில் நடைபெறும் அடுத்த நடவடிக்கை சுலபமாகவும் துரிதமாகவும் நடைபெறாது.

இந்தக் கஷ்ட சாத்தியமான போரின் சிரமங்களை அனுபவித்துவரும் நமது படைகளுக்கு, நாம் உண்மைகளுக்கு அதிகமாக மதிக்காமலிருந்தாலே பெரிய சாதகம் செய்ததாகும். கிடைத்த வெற்றிகளைக்கொண்டு நாம் திருப்தியடைவோம். ஒவ்வொரு நடவடிக்கையிலும் அளவு கடந்து நாம் லாபங்களை எதிர்பார்க்கக்கூடாது. பூர்ணமான வெற்றி கிடைப்பது நிச்சயம். அந்த முடிவை ஏற்படுத்த நாம் இதற்கு முன் நினைத்ததுபோலில்லாமல் நமது நடவடிக்கைகளையும், நமது அபிப்பிராயங்களையும் நீண்டகாலத்திட்டத்திற்குறியதாக அமைத்துக்கொள்ள வேண்டும். நாம் செய்வது தவறாக இருக்கலாம். ஆகிலும் நாம் செய்யும் தவறு நல்லதுக்குத்தான். படைகளை எவ்விதம் கலைத்துவிடுவதென்பதிலும், யுத்தத் தொழிலாளர்களை பர்த்தரப்பு செய்து வேலையில்லாத கோஷ்டிகளை உண்டுபண்ணுவதிலும் நாம் கவனம் செலுத்துவது காடுகளில் ஒளிந்துகொண்டும், அணைகளின் பக்கத்தில் தாக்கப்படக்கூடிய நிலைமையிலும் ரஜா அன்னியில் வேலை செய்துவரும் படைகளுக்கு அபத்தமான வழியில் உதவி செய்ததாகும். இது ஸோல்ஜருக்கு சங்கடத்தை விளைவிக்கும். யுத்தம் இன்னும் முடிந்தபாடில்லை. இன்னும் திடத்துடனும் ஊக்கமாகவும் நாம் போரை நடத்தவேண்டுமென்று மிஸ்டர் சர்ச்சில் வியர்த்தமாகப் பேசி வரவில்லை. ஜெனல் ஈசன்ஹவர் சொன்னமாதிரி, ஸோல்ஜர்களும் பொது மக்களும் அதிகப்பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த உணர்ச்சி நிர்வாகத்தின் எல்லா ஸ்தாபனங்களிலும் காணப்படவேண்டும். படைகளைத் திரட்டி அவைகளுக்குப் பயிற்சியளிப்பதிலும், சர்பராக்களைத் தயாரிப்பதிலும், கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதிலும் நாம் கவனம் செலுத்தவேண்டும். டங்கர்க்குப்பின் நமக்கு ஏற்பட்ட நெருக்கடியைப்போல் ஜெர்மனியிலுள்ள உத்தியோகத் தலைவர்களுக்கு சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. அநேகத் துறைகளில் அவர்கள் விஞ்ஞானசாஸ்திரத்தை வியப்படையும் நிலைமைக்கு அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். புதிய முறைகளால் நம்முடைய அபாரமான முஸ்தீப்பு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட ஜெர்மனி செய்துவரும் முயற்சிகள் பயன்படாது. ஆகிலும் நாம் நமக்கு அதிர்ஷ்டம் வந்து விடுமென்று நினைப்பது தவறாகும். வெற்றி சுலபமாகக் கிடைத்துவிடுமென்று நாம் எவ்வளவுக்கெவ்வளவு நினைக்காமலிருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு வெற்றி நமக்கு துரிதமாகவும் நிச்சயமாகவும் கிட்டிவிடும். ஜெர்மானியர்களைப் போல் நமக்கும் காலப்போக்கு முக்கியத்துவமுள்ளது.

எதிரியின் பூமியில் நியாயம் வழங்குவது.

ராணுவக் கோர்ட்டின் முதல் கூட்டம்.

நவம்பர் மாதம் 22-ம் தேதி புதன்கிழமையன்று ஜெர்மன் பூமியிலேயே பிரிடிஷ் நியாயம் முதன் முதலாக வழங்கப்பட்டதென்று பிரிடிஷ் 2-வது சேனையுடனிருக்கும் நியூஸ் கிரானிகிள் பத்திரிகையின் யுத்த நிருபரான S. L. சாலன் எழுதுகிறார்.

பிரிடிஷ் ராணுவ கோர்ட் அதன் முதல் கூட்டத்தை கிலன்கொர்சனுக்கு சமீபத்தில் கார்கல்ட் என்னும் கிராமத்தில் நடத்தியது. நேசதேசத்தாரின் அடக்குமுறைச் சட்டத்தை மீறி ஜெர்மன் எல்லையைத்தாண்டி ஹாலந்துக்குள் சென்றதாக குற்றம் சாட்டப்பட்ட 9 ஜெர்மன் ஸ்திரீகளும், இரண்டு ஜெர்மன் ஆடவர்களும் பிரிடிஷ் ஆபீஸர்களால் பரிசீலனை செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள். ஒருவரைத்தவிர மற்றெல்லோரும் குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். அவர்களில் அநேகர் தண்டனையைக் குறைப்பதற்கான சந்தர்ப்பங்களை வெளியிட்டார்கள்.

கடுமையான தண்டனை ஜோஸப் கிலன் என்பவருக்கு விதிக்கப்பட்டது. நேசதேச பிரகடனத்தை மீறி அவர் மனதார ஜெர்மனியை விட்டுச்சென்றார். அவர் ஹாலந்தில் ராணுவக் கைதி முகாமில் ஆறு மாதங்கள் வரையில் வசித்து வரவேண்டும். மற்ற தண்டனைகள் 1 பவுன் அபராதம் முதல் 7 நாள் காவலும் அல்லது மூன்று மாதக்காவலும் உள்ளவை.

மார் காரெதா மார்டில்டா தோலன் என்பவள் எல்லையைத்தாண்டக்கூடாது என்று போடப்பட்ட விளம்பரத்தை நான் பார்வையிடவில்லையென்று சொன்னார்கள். அவளுக்கு

ஐந்து குழந்தைகளிருக்கின்றன. கடைசிக்குழந்தைக்கு நான்கு வயதாகிறது. அவளுடைய புருஷன் எங்கிருக்கிறுனென்று அவளுக்குத்தெரியாது.

கோர்ட்டின் தலைவர் பின்வருமாறு சொன்னுர். "உன்னை குற்றவாளி என்று கண்டு பிடிக்கிறேன். இருக்கும் ஸந்நிவேசங்களில் உன்னை காவல் கூட்டத்துக்கு அனுப்புவதாக உத்தேசிக்கவில்லை." அவளுக்கு 1£ அபராதம் விதிக்கப்பட்டது.

எதிரிகளுக்காக ஒருவயது முதிர்ந்த நியாயவாதி ஆஜரானுர். கவெண்ட்ரியைச் சேர்ந்த போலீஸ் இன்ஸ்பெக்டரான காப்டன் E. C. வார்ட் பிராஸிக்யூஷன் தரப்பில் கேஸை நடத்தினுர். கோர்ட்டிற்கு பிரிடிஷ் படையைச்சேர்ந்த நியாயவாதியும் மாஞ்சஸ்டரில் நியாயவாதியாக இருந்த காப்டன் R. C. ஸெட்டன் தலைமை வகித்தார்.

அந்தக்கோர்ட்டின் நடவடிக்கையைக் கவனித்துவந்த ஒருவயது முதிர்ந்த ஜெர்மானியரை நடவடிக்கைகளைப்பற்றி அவருடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டார்கள். சிலசமயங்களில் டாங்குகளின் நடமாட்ட சப்தமும், பீரங்கிக்குண்டுகளின் வெடி சப்தமும் சம்பாஷணைக்குக் குந்தகம் விளைவித்தன. அவன் சொன்னுன் "அற்புதமானது! நியாயம் ஜெர்மனிக்கும் வந்து விட்டது."

கடன் குத்தகை—யுத்த சர்பராக்களை ஒன்று திரட்டுவது.

சர்வதேச ஒத்துழைப்பில் முயற்சி.

(டைம்ஸ் பத்திரிகை.)

விடுதலைக்காகப் பாடுபடும் ஆங்கிலோ அமெரிக்கப் படைகளுக்கு முக்கிய தளமான பிரிடனின் தலைநகரமான லண்டனில் அமெரிக்காவில் நடைபெற்ற வந்தனம் செலுத்துதல் விழாவை ஒட்டி நடைபெற்ற வைபவத்திற்கு யுக்தமான விளைவாக அட்லாண்டிக் கடலின் இரு பக்கங்களிலும் உள்ள இரண்டு வல்லரசுகளும் சரித்திரத்திலேயே மிகவும் சக்தியுள்ளதும், முக்கியத்துவமுள்ளதுமான உடன்படிக்கைக்கு பிரிடன் செய்த பேருதவியின் ஒரு அம்சத்தைப் பற்றி பிரசுரம் செய்தன.

கடன் குத்தகைத் திட்டத்தைப்பற்றி அமெரிக்க காங்கிரஸுக்கு ஜனுதிபதி ரூஸ்வெல்ட் சமர்ப்பித்த 17-வது ரிப்போர்ட் 1944-ம் வருஷம் ஜூன் மாதம் வரையில் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகள் அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கும் சாமான்களையும், சேவைகளையும் பற்றி விரிவாக எடுத்துரைத்திருந்தது. இதே சமயத்தில் பிரிடனும் பரஸ்பர உதவியைப்பற்றி ஒரு பிரசாரத்தை வெளியிட்டது. அதன் பிரகாரம் பிரிடனும் குடியேற்ற நாடுகளும் நேச தேசத்தார்களுக்கு அனுப்பியிருக்கும் சாமான்களும், முஸ்தீப்புகளும், பொருளுதவி வசதிகளும் 1,000 மிலியன் பவுன்களுக்கு அதிகமான பொருமானமுள்ளவையென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. பிரிடனின் மதிப்புப்படி உள்ள £ 1,079,648,000 பொருமானத்தில் £ 604,730,000 பொருமானமுள்ள சாமான்கள் அமெரிக்காவின் தேவைக்கு அனுப்பட்டிருக்கின்றன. இந்த உதவியின் வெளிப்படையான சின்னங்களான விமானதளங்கள், படைமுகாம்கள், வீடுகள், வைத்தியசாலைகள், போக்குவரத்து சாதனங்கள் விசேஷமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அல்லது அமெரிக்கப் படைகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் பிரிடிஷ் மக்களின் வாழ்க்கையின் சகஜமான உபகரணமாகத் தோன்றிவிட்டன.

பிரிடனிலுள்ள அமெரிக்கப் படைகளுக்குத் தேவையான சர்பராக்கள் சேவைகளின் மூன்றில் ஒருபாகம் பிரிடனுல் பதில் முறையில் கொடுக்கப்பட்டதென்று மிஸ்ட்டர் ரூஸ்வெல்ட் வெகு அழகாக வர்ணித்திருக்கிருர். மேலும் ஐரோப்பியப் போர்முனையில் அமெரிக்கப்படைகளுக்குத் தேவையான ஆகாரத்தில் மூன்றில் இரண்டு பாகமும், எஞ்சினியர்களின் சர்பராக்களில் ஐந்தில் மூன்று பாகமும் பிரிடனிடமிருந்து பெறப்பட்டன. பரஸ்பர உதவி பிரிடனுக்கும், ஐரோப்பியப் போர்முனைக்கு மட்டும் கிடைத்துவிடவில்லை. இந்த அரிய சேவைக்கு சாம்ராஜ்ய நாடுகளும், பிரிடிஷ் சாம்ராஜ்யமும் பொருப்பெடுத்துக்கொண்டன. ஒருவருஷம் வரையில் இயற்கைப் பொருள்களும், உணவுப்பொருள்களும் குடியேற்ற நாடுகளிலிருந்துதான் குத்தகை முறையில் அனுப்பப்பட்டிருக்கின்றன. பிரிடனின் கண்காணிப்புக்குட்பட்ட மத்திய கிழக்கிலுள்ள எண்ணெய்ப் பிரதேசங்களிலிருந்து அமெரிக்க 10, 14-வது விமானப் படைக்கும் ஜப்பானைத் தாக்கிவரும் சூபர் பறக்கும் கோட்டை விமானங்களுக்கும் எண்ணெய் ஸப்ளை செய்யப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியாவும், நியூஸிலாந்தும், இந்தியாவும் தூரக் கிழக்கிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கு 1,850 மிலியன் ராத்தல்கள் எடையுள்ள உணவுப் பொருள்களை ஸப்ளை செய்திருக்கின்றன. ஆஸ்திரேலியாவில் 20,000-க்கு மேற்பட்ட படைகளை இறக்கும் படகுகள் பிலிப்பைன்ஸ் போருக்காக அநேகமாகக் கட்டப்பட்டுவிட்டன. இந்தப் புள்ளி விவரங்களைக்கொண்டு திருப்தி அடைவதற்குத் தகுந்த காரணங்கள் உள.

அநேகர் படைகளில் சேர்க்கப்பட்டும், சென்ற யுத்தத்தைவிட மிகுதியாக இப்பொழுது படைகளிலும், வெடிமருந்து உற்பத்தியிலும் அநேகர் ஈடுபட்டிருக்கப்பட்டும் இருக்கும் பொழுது தொழிலாளர்களும் ஐஸ்வர்யங்களும் இந்த வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அமெரிக்காவுக்கு கடன் குத்தகை பதில் முறையில் அனுப்பப்பட்ட ஏராளமான உதவியுடன் ருஷ்யாவுக்கு ஜூன் மாதம் முடிய அனுப்பப்பட்ட உதவி £ 269,457,000 பொருமானமுள்ளதென்று மதிப்பிடப்படுகிறது. ருஷ்யர்களின் மகத்தான நடவடிக்கைகளுடனும், தியாகங்களுடனும் இந்தப் புள்ளிவிவரங்களை ஒப்பிட்டுப்பார்ப்பது சாத்தியமில்லாததென்பது, பரஸ்பர உதவிமூலம் சித்திபெற்ற அரியசேவைகளைக் கண்டு நேசதேசத்தார்கள் தங்களுடைய உதவியைப்பற்றி பீத்திக்கொள்ளுவதற்கோ அல்லது உபரியான பாத்தியம் கொண்டாடுவதற்கோ இடம் தரவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன. ஆனால் அதை மாற்றி வேறுவிதமாக விவாதிக்கலாம். யுத்தத்துக்கு ருஷ்யா செய்திருக்கும் பேருதவியை மதித்துப் பார்ப்பதற்கு ருஷ்யாவுக்கு நேசதேசத்தார்கள் செய்திருக்கும் உதவிதான அளவுகோல்போன்றது. நேசதேசத்தாரின் ஆயுதக் குவியலின் ஒரு பாகத்தை எதிரியைக் குறித்து பயன்படும்படி உபயோகிப்பதற்கு ருஷ்யாவில் போரும் ருஷ்யர்களின் முயற்சியும்தான் முக்கியமாக இருந்தன. நேசதேசத்தார்களுக்கு அனுப்பப்பட்ட கடன் குத்தகை இட்ட சாமான்களில் பிரிடனுக்குத்தான் பெரும்பாகம் அமெரிக்காவினால் அனுப்பப்பட்டிருக்கிறது. பிரிடன் தன்னந்தனியே நின்றபொழுது இந்த உதவிதான் பிரிடனுக்குச் சாதகமளித்தது. இதற்கு பதில் முறையில் 1943-ம் வருஷம் ஜூன் மாதம் முதல் 1944-ம் வருஷம் வரையில் அனுப்பப்பட்ட உதவி அதிகரித்திருப்பதிலிருந்து, அமெரிக்கப் படைகள் முன்னணிப் போரில் ஏராளமாகவும் உறுதியாகவும் புகுந்துவிட்டனவென்பதற்கு ருஜூக்கிடைத்திருக்கிறது.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்ன பிரகாரம் இவ்விதமாக ஒன்றுபட்டு நடைபெறும் போரை புள்ளி விபரங்களைக்கொண்டோ அல்லது பொருமதியைக்கொண்டோ மதிப்பிட முடியாது. புள்ளி விபரங்களும் அரைகுறையானவை. இவைகளில் உற்பத்தி ரகசியங்களைத் தானம் செய்த அல்லது அனுபவத்தையும் சமார்த்தியத்தையும் கடனாகக் கொடுத்ததும் இதில் சேர்க்கப்படவில்லை. குறிப்பாகச் சொன்னால் அவைகளை மிஸ்டர் சர்ச்சில் சொன்ன "ரத்தம், பரிசிரமம், அனுதாபம், வியர்வை," முதலிய வார்த்தைகளுடனும் ஒப்பிட முடியாது. சர்வதேச ஒத்துழைப்பில் முயற்சி எடுத்துக்கொண்ட இரண்டு துணிவுகரமான ராஜதந்திரிகளின் மனதில் உதவி செய்வதில் ஐந்தொகை போடவேண்டுமென்ற எண்ணமே உதிக்கவில்லை. நவம்பர் 24-ம் தேதியன்று காங்கிரஸூக்கு சமர்ப்பித்த ரிபோர்ட்டுடன் அனுப்பிய கடிதத்திலும் ஜனாதிபதி இந்த அபிப்பிராயத்தைத்தான் அடிக்கடி வெளியிட்டிருக்கிறார் "இது லேவாதேவியின் இரண்டு கணக்குகளல்ல. நாங்கள் பொருளைக் கடன் கொடுக்கவில்லை அல்லது கணக்குப்படி பொருளையும் பெற்றுக்கொள்ளவில்லை.

கடன் குத்தகைதிட்டம் என்பது ஒன்றுபட்ட யுத்த ஸப்ளை திட்டம். அதன் முக்கிய லக்ஷியம், சர்பராக்களின் உற்பத்தியையும் அல்லது எதிரிகளை நோக்கி எந்த தேசம் அவைகளை உபயோகிக்கிறதென்பதையும் பொருட்படுத்தாமல் நேசதேசத்தார்களின் ஒன்றுபட்ட ஐஸ்வர்யங்களை எதிரியைத் தாக்குவதில் மிகவும் உபயோகமுள்ள வகையில் உபயோகிப்பது.

இவ்விதமாக பெரிய, சிறிய நேசதேசத்தார்கள் பங்கெடுத்துக்கொண்டு ஐஸ்வர்யங்களை ஒன்று திரட்டுவதென்ற கொள்கையை அடிப்படையாகவுள்ள உழைப்பாளிகளான கூட்டாளிகள் இதுவரையில் சரித்திரத்தில் கண்டதேயில்லை. கடன் குத்தகை திட்டத்தின் விளைவாக நடைபெற்ற நடவடிக்கைகளிலிருந்து அழியாப்புகழ்பெற்ற ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சமாதானத்தை விரும்பும் உலகத்துக்கு ஒரு படிப்பினையை போதிக்கத்தகுதியுள்ளவர் தான். வெற்றி கிடைத்தவுடன் கடன் குத்தகை திட்டமும் பதிலுதவியும் நின்றுவிடும். ஆகிலும் நேசதேசத்தார்களின் கூட்டுறவு நிலைபெற்று வலுப்பட வேண்டும். அவர்கள் உலகம் சுபிக்ஷமாக வாழ்வதற்கு பொருளாதார அஸ்திவாரங்களை அமைக்கவேண்டும். யுத்தத்தில் வெற்றிக்கு ஒற்றுமை அவசியமானது போல் சமாதானத்துக்கும் க்ஷேமத்துக்கும் அத்தியாவசியமான இடங்களுக்கு சாமான்களும் சேவைப்படைகளும் தங்கு தடையன்னியில் தாராளமாகச்செல்ல வேண்டியதும் அத்தியாவசியமாகும்.

ஸைலீஷியாவுக்கு ருஷ்யாவிடமிருந்து ஆபத்து.

ஜெர்மனியைப் பலமாகத் தாக்குவது.

லெப்டினன்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்.

ஹாலந்திலிருந்து ஸ்விட்ஸர்லாந்து வரையில் நடைபெறும் ஜெனரல் ஈசன் ஹாவரின் மகத்தான தாக்குதல்தான் நமக்கு முக்கியமான தகவல்கள். ஆகிலும் நமது கவனத்தை ருஷ்யப் போர் முனையை நோக்கிச் சிறிது சாய்க்க வேண்டுமென்று நினைக்கிறேன். நாஸி

ஜெர்மனியை ஒரே அடியில் நொறுக்கிவிட முடியாது. அதைக் கொஞ்சம் கொஞ்சமாக நசுக்கி அழிக்க வேண்டும்.

ஆகையால் மார்ஷல் மாலிநேவ்ஸகி இது வரையில் என்ன செய்திருக்கிறாரென்றும், எதிர் காலத்தில் என்ன செய்யக்கூடுமென்பதிலும் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

மூன்று மாதங்களுக்குமுன் அவரும் அவருடைய இரண்டாவது யூக்ரெனியப் படையும் நிஸ்டார் நதியின் வடக்குக் கரையில் நின்றுகொண்டிருந்தன. இப்பொழுது அவர் புடாபெஸ்டின் வாசற்படிக்கு வந்து விட்டார். அவருக்குப் பின்புறத்தில் பத்திரமான போக்குவரத்து மார்க்கங்கள் ஜெர்மனியின் ஆதீனத்துக்குட்பட்ட ருமேனியா, பல்கேரியா வில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்தபடியாக என்ன நேரிடுமென்று சொல்லுவதற்கில்லை. அவர் புடாபெஸ்டைப் பிடித்தபின், வியன்னாவுக்குச் சென்று அங்கிருந்து பிராச்வரையிலும் செல்லக்கூடும். இந்த நடவடிக்கைகள், பருவகாலத்தையும் மார்ஷல் ஸ்டாலினின் அபிப்பிராயங்களையும் ஜெர்மனியில் ஏற்படும் அதிர்ச்சிகளையும் பொருத்ததாகும். இதற்குமேல் மார்ஷல் மாலிநேவ்ஸகி முன்னேறா விட்டாலும் அவர் ஒரு மகத்தான வேலையைச் செய்து முடித்துவிட்டார். ருஷ்யாவின் தெற்கு விலாப்பக்கத்திலிருந்த ஒரு மகத்தான அபாயத்தை அவர் நீக்கி விட்டார். இதுபோல் பால்டிக் நாடுகளிலுள்ள செம்படைகள் ருஷ்யாவின் வடக்கு பார்ச்வத்துக்கு ஏற்பட்டிருந்த அபாயத்தை நீக்கிவிட்டன. ஆகிலும் கிழக்குப் பிரஷ்யாவில் நிலைமை இன்னும் தெளிவுபடவில்லை.

ருஷ்யர்கள் இது வரையில் மூன்றரை வருஷங்களாகப் போர் புரிந்திருக்கிறார்கள். பார்ச்வத்தை அபாயத்துக்குட்படுத்தி விட்டு அவர்கள் போரை நடத்தமாட்டார்கள். பார்ச்வத்திற்கு ஏற்பட்ட ஆபத்தை நிவர்த்திப்பதில் செலவிடப்பட்ட காலஹரணம் பிற்காலத்தில் வருந்துவதில் செலவிடும் காலத்தை மீதப்படுத்தியதாகும் என்ற ராணுவ மேற்கோளை ருஷ்யர்களைப்போல் வேறெருவரும் அறியமாட்டார்கள்.

பார்ச்வத்தில் ருஷ்யாவில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பத்திரத்தை அளித்த துடன், மத்தியிலிருந்த ஜெர்மன் படைகளையும் அங்கு வரும்படி செய்து, மத்தியிலுள்ள ஜெர்மன் தற்காப்புகளை மிகுதியாக பலஹீனப்படுத்திவிட்டன.

தூர வடக்கிலும், தூரத்தெற்கிலும் ருஷ்யப்படைகளின் நடவடிக்கைகளினால் ஏராளமான ஜெர்மன் டிவிஷன்கள் ஈடுபடுத்தப்பட்டனவென்று தெரியவருகிறது. வடக்கில் லிதுவேனியாப் போரில் 35, 40 ஜெர்மன் டிவிஷன்கள் ஈடுபடுத்தப்பட்டன. கிழக்குப் பிரஷ்யாப் போரில் 25, 30 டிவிஷன்கள் கலந்துகொண்டன. இவ்விதமாக 60, 70 ஜெர்மன் டிவிஷன்கள் ஈடுபடுத்தப்பட்டன. தெற்கில் மாலிநேவ்ஸகி 20 ஜெர்மன் டிவிஷன்களையும் அநேகமாக 20 ஹங்கேரிய டிவிஷன் படைகளையும் எதிர்த்துப் போராடினார்.

இதே சமயத்தில் வார்ஸாப் போர்முனையிலும் ஜெர்மானியர் பலமாக எதிர்த்துப் போராடினார்கள். ஆகையால் வார்ஸாவுக்கும், கிராகோவுக்கும் மத்தியிலுள்ள இடை வெளியில் எதிரியின் பலமான படைகள் இல்லை. இந்த இடத்தில் ஜெர்மனியின் பொருளா தாரத்தில் மிகவும் நுட்பமான பாகமான, தொழிற்சாலைப் பிரதேசமான ஸைலீஷியாவைத் தாக்கித்தான் முன்னேற்றம் ஏற்படும்.

ரூருக்கும், ஸாருக்கும் நேசதேசப்படைகளிடமிருந்தும் விமானங்களின் வெடிகுண்டு வீச்சிலிருந்தும் அபாயம் ஏற்பட்டுவிட்டதால் ஸைலீஷியா இப்பொழுது ஜெர்மனிக்கு அதிக முக்கியமுள்ளதாக இருக்கிறது.

இப்பேர்ப்பட்ட மகத்தான போர்முனையில் பருவகால நிலைமை சௌகரியமாக இல்லாத தினால் எல்லாப் போர்முனை நடவடிக்கைகளும் ஒன்றுபட்டு நடைபெறும் என்று சொல்வதற் கில்லை. நார்மண்டியில் D. தினத்தன்று போர் துவக்குவதற்கு சில வாரங்களுக்கு முன்பே ஜெனரல் அலெக்ஸாண்டர் இதாலியில் வேனிர்காலப் போரைத் துவக்கியது எல்லோருக்கும் ஞாபகமிருக்கலாம். D. தினத்திற்கு இரண்டு வாரங்களுக்குப்பின் ருஷ்யா வேனிர்கால முன்னேற்றத்தைத் துவக்கி ஆறு வாரங்களுக்குள்ளாக சில இடங்களில் 250 மைல்கள் முன்னேறியிருக்கிறது.

அதே விதமாகப் போர் துவக்கமாகிவிட்டது. மார்ஷல் மாலிநேவ்ஸகியின் முன் னேற்றம் தடைபட்டிருக்கும் பொழுது ஜெனரல் ஈசன் ஹவர் மாரிகாலத் தாக்குதலைத் துவக்கிவிட்டார். இது நடை பெறுமலிருக்க முடியாது. கூடிய சீக்கிரத்தில் வார்ஸாவுக்கும், கிராகோவுக்கும் மத்தியில் ருஷ்யர்கள் போரைத் துவக்கிவிடுவார்கள். அப்பொழுது மேற்கு, தெற்கு, கிழக்கிலிருந்து ஒரே சமயத்தில் தாக்கப்படும் சிரமங்களை ஜெர்மனி நன்கு உணரும்.

யுத்தக் கப்பல்களை மூழ்கடிக்கக்கூடிய வெடிகுண்டுகள்.

ஆகாய யுத்தத்தில் புதிய அபிவிருத்தி.

(கோல்ஸ்டன் ஷெப்பர்ட், ஸண்டே டைம்ஸ் பத்திரிகை.)

டிர்பிட்ஸ் நாசம் செய்யப்பட்டவரையில் வெடிகுண்டு வீச்சினால் மட்டும் இந்த யுத்தத்தில் எந்த யுத்தக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டதில்லை. ஆகாயத்திலிருந்து அனுப்பப்பட்ட மீன் வெடிகள் பிரிடிஷ், இதாலிய யுத்தக் கப்பல்களை நாசம் செய்திருக்கின்றன. ஆகிலும் கடற்படை நிபுணர்கள் வெடிகுண்டுகள் மட்டும் ஒரு யுத்தக் கப்பலை மூழ்கடித்துவிடாதென்று நினைத்துவந்தார்கள்.

டிர்பிட்ஸுக்கு ஏற்பட்ட நாசத்திலிருந்து இந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். நேசதேசத்தாரைவிட ஜெர்மனிக்கும் முக்கியமாக ஜப்பானுக்கும் தான் இதனால் அதிகக் கவலை ஏற்படக்கூடும்.

இந்த வெற்றிக்குக் காரணம் நேசதேசத்தார்கள் கவசங்களைப் பிளந்துவிடக்கூடிய அபாரமான கனமுள்ள வெடிகுண்டுகளை உற்பத்தி செய்ததும், முன் யோஜனையுடன் 12,000 ராத்தல் எடையுள்ள வெடிகுண்டுகளை ஏற்றிச்செல்லக்கூடிய விமானங்களை நேசதேசத்தார்கள் கட்டி முடித்திருப்பதும்தான்.

நமது லங்காஸ்டர் விமானத்துக்குச் சமமாக ஜெர்மனியில் ஹிங்கல் 167 விமானத்தைச் சொல்லலாம். ஆகிலும் அவைகளைத் திருத்தியமைத்தாலொழிய அவைகள் இவ்வளவு கனமான வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லமுடியாது. ஜப்பானியரிடம் இவ்வித ரகமுள்ள வெடி விமானங்களே கிடையாது. சூபர் பறக்கும் கோட்டை என்று புகழ்பெற்ற ந. 29 என்ற கனமான புதிய அமெரிக்க விமானமும் 12,000 ராத்தல் எடையுள்ள வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லக்கூடியது. அதுவும் லங்காஸ்டர் விமானமும் ஒரே மூச்சில் 2,000 மைல்கள் சுற்றி வரக்கூடும்.

துறைமுகத்தில் டிர்பிட்ஸுக்கு ஏற்பட்ட தாக்குதலை துறைமுகங்களிலுள்ள ஜப்பானிய யுத்தக் கப்பல்களுக்கும் பிரயோகம் செய்யலாம்.

லங்காஸ்டர் விமானம் அநேக காலமாக உபயோகத்திலிருந்து வருவதால் அதேமாதிரி விமானங்களைக்கட்ட ஜப்பானியர்களுக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. ஜெர்மனியில் நொருங்கி விழுந்த லங்காஸ்டர் விமானங்களை அவர்கள் நன்றாய் பரிசீலனை செய்து, அவைகளின் அமைப்பு, விவரங்கள் முதலியவற்றை ஜப்பானுக்கு அனுப்பியிருக்கலாம். ஆனால் வெடிக்காத 12,000 ராத்தலுள்ள வெடிகுண்டு இது வரையில் ஜெர்மனியின் கைவசமாகவில்லை.

விமானத்தைப்போல வெடிகுண்டு அமைப்பிலும் அபிவிருத்தி ஏற்படவேண்டும். அதற்கு மூன்று குணங்கள் அவசியம். நல்ல வடிவம், அதிகமாக வேகத்துடன் செல்லுவதற்கு அதிக கனம், ஒன்றுடனும் மோதி உடைபடாதபடி கனமான கூடு. லக்ஷியங்களைப் பிளந்து செல்லக்கூடிய உபாயம். ஊடுருவிச் செல்லக்கூடிய இந்த அமைப்புகளுடன் கப்பலின் உள்ளே சென்றவுடன் உயர்தரமான நாசத்தை விளைவிக்கக்கூடிய உயர்தரமான மருந்தும் ஏராளமாக வெடிகுண்டில் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

யுத்தத்தின் வெற்றிகரமான முயற்சிகளில் பிரிடனின் பெரிய வெடிகுண்டையும் ஒன்றாக மதிக்கவேண்டும். இது இன்னும் கடற்படைப்போரில் உபயோகிக்கப்படவில்லை. டிர்பிட்ஸைத் தாக்கியபொழுது 12,000 ராத்தல் எடையுள்ள வெடிகுண்டுகள் 16,000 அடி உயரத்திலிருந்து போடப்பட்டன. குண்டு விழுவதற்குள் அசைந்து செல்லும் கப்பல் வெடிகுண்டின் வட்டாரத்தைவிட்டு அப்புறம் செல்ல அவகாசம் ஏற்பட்டுவிடும். நேராகக் கப்பலின்மேல் விழாது. ஆனால் முடமாக்கப்பட்டு, தாத்காலிகமாக அமைக்கப்பட்ட கப்பல் கட்டுமிடங்களில் பழுது பார்க்கப்பட்டுவரும் கப்பல்கள் அதற்குச் சிறந்த லக்ஷியங்களாக இருக்கும். வலுவான விமான எதிர்ப்பு தற்காப்புகள் உள்ள முக்கியமான கப்பல்கட்டும் தளங்களில் ஜாக்கிரதையாக வெடிகுண்டுகளை வீசுவது சாத்தியமல்லாதது. எண்ணெயையும், சர்பராக்களையும் நிரப்பிக்கொள்ளும் யுத்தக் கப்பல்கள் கனமான வெடி விமானக்களின் குண்டுவீச்சுக்கு உட்படக்கூடியவை.

இந்த அபிவிருத்தி ஜப்பானிய யுத்தக்கப்பல்களின் நிலமைக்கு அபாயம் உண்டுபண்ணக்கூடியவை. அவைகள் பத்திரமாக நிற்கும் தளங்கள், கனமான வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லும் வெடிவிமானங்களின் வட்டாரத்தைத் தாண்டி இருக்கவேண்டும்.

இப்பொழுது ஜப்பானியர்கள் பின் தள்ளப்பட்டு வருவதினால் நேசதேச வேவு பார்க்கும் விமானங்கள் அவர்களின் பெரிய கப்பல்களுக்குத் தேவையான முன்னணி தளங்களைக்கண்டு பிடிக்கவேண்டும். எதிரிகள் பின்னணியிலுள்ள தளங்களுக்குச் செல்லவேண்டும். எதிரியுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுவதில் கால அளவினால் ஏற்பட்ட அசௌகரியத்தையும் வெகுதூரம் செல்லவேண்டியதற்காக எண்ணெயை அதிகமாக உபயோகிக்க வேண்டிய சிரமத்தையும் எதிரி அனுபவிக்கவேண்டும்.

நங்கூரம் பாய்ச்சி நிற்கும் கப்பல்களைத் தாக்கக்கூடிய இந்தப் புதிய விமான நடவடிக்கைக்கு பஸிபிக்கில் பிரகாசமான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆகையால் பூர்ணமான முஸ்தீப்புகளுள்ள ஒரு லங்காஸ்டர் விமானம் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, நியூகினியாவிலுள்ள விமானதளங்களைச் சுற்றி வந்ததில் அதிக விசேஷமிருக்கிறது.

ஜப்பானின் எந்த பிரதேசமும் வெடிகுண்டு வீச்சின் வட்டாரத்துக்குட் பட்டது.

இரு புறத்திலும் விமான நடவடிக்கை.

(பீடர் பர்கெட்.)

ஜப்பானில் அமெரிக்க வெடி விமானங்கள் சென்று வெடிகுண்டுகளை வீசக்கூடாத எந்த பிரதேசமும் கிடையாது. சைனாவிலுள்ள சைபானிலிருந்து 2,500 மைல் தூரத்திலுள்ள 20-வது பாம்பர் கமாண்டுப் படை கியூஷு, தெற்கு ஜப்பானிலிருந்து கொரியா, வடக்குச் சைனா, மஞ்சூரியா வரையில் பறந்து செல்லக்கூடும். சைபானிலுள்ள 21-வது பாம்பர் கமாண்டுப்படை ஜப்பானியத் துறைமுகங்கள் பேரிலும்,தொழிற்சாலை பிரதேசங்கள் பேரிலும் வெடி குண்டுகளைப் போடக்கூடும்.

நவம்பர் 23-ம் தேதியன்று டோக்கியோவை சூபர் பறக்கும் கோட்டைகள் தாக்கிய நடவடிக்கை, வெடி குண்டுகளின் சங்கியையிலும், விமானங்களின் சங்கியையிலும் மத்திய பஸிபிக்கில் நடைபெற்ற யுத்த சரித்திரத்தில் தரையிலிருந்து புறப்பட்ட வெடி விமானங்கள் செய்த மகத்தான தாக்குதலாகும்.

ஜப்பானியர்கள் திடுக்கிட்டார்களென்று ஜப்பானியத் தலைநகரத்தின்பேரில் சென்ற முதலாவது விமானத்தில் சென்ற பிரிகேடியர் ஜெனரல் எம்மட் ஓட்ஸெல் சொன்னார். ஜப்பானிய சண்டை விமானங்கள் எதிர்த்துப் போராடவில்லை. விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் சொல்பமாக குறிதப்பி அடித்தன. "இந்த நடவடிக்கை மிகவும் சுலபமாக இருந்தது" என்று அவர் சொன்னார்.

வெகு உயரத்திலிருந்து வெடி குண்டு வீச்சு.

நாங்கள் டோக்கியோ பேரில் வெடிகுண்டு வீசும் விமானங்களைப் பார்வையிட்டோம் என்று டெயிலி டெலகிராப்பின் சைபான் நிருபரான வில்லியம் மாக்காபின் எழுதியிருக்கிறார். டோக்கியோ பேரில் அவைகள் வெகு உயரத்தில் பறந்து சென்றன. பிராணவாயு மூடிகளில்லாமலேயே அமைக்கப்பட்டிருந்த ஒரு திட்டப்படி விமானிகள் விமானத்தில் தாராளமாகச் சென்றார்கள்.

ஒவ்வொரு மூட்டும் ஒவ்வொரு ஜன்னலும் நாடாக்கள் மூலம் அடைக்கப்பட்டிருந்தது. எங்கு பார்த்தாலும் பஞ்சு போன்ற திராவகம் தெளிக்கப்பட்டிருந்தது. நிமிஷத்துக்கு 40 ராத்தல் வீதம் அறைகளில் பிராணவாயு டர்போ சூபர் சார்ஜர்கள் மூலம் நிறப்பப்பட்டது. அடுப்புகள் மூலம் அறைகளில் உஷ்ணம் சதா காலமும் இருந்து வந்தது. பீரங்கிப் படையினர் இருக்கும் அறைகளுக்கும் விமானிகளின் அரைக்கும் ஸ்பெஷலாக கண்ணாடி மூடிகள் அமைக்கப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டிருந்தன.

ஸமக்ஷேமம் திட்டம்—வெறும் பேச்சு.

பீடர் டி மெண்டெல்ஸோன்.

உலகத்தாரையும், ஸ்நேகிதர்களையும், எதிரிகளையும் அவர்களின் யுத்த நோக்கங்களுடையவும், நடவடிக்கைகளுடையவும், யோக்கியப்பொறுப்பையும், பற்றுதலின்மையையும் நம்பும்படி அச்சுநாடுகள் சில சமயங்களில் சொல்லிவந்த மேற்கோள்களில், ஜப்பானின் பெரிய கிழக்கு ஆசியா ஸமக்ஷேமக்கொள்கை திட்டத்தைவிட வியர்த்தமானபேச்சைப் போல் வேறொன்றும் அதிகமாக நம்பப்படவில்லை. இந்த விசித்திரமான எண்ணத்தை ஒட்டித்தான் ஜப்பானியர்களின் பேச்சும் நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன.

இதைப்போல் இதுவரையில் ஹிட்லரும் ஐரோப்பாவில் புதிய திட்டம் என்ற புகைப் படலத்தின் கீழ் அநேக அக்கிரமங்களைச்செய்து வந்திருக்கிறான். இந்த ஸமக்ஷேமக் கொள்கைக்கு அடிப்படை என்ன ? அதன் உண்மையான அர்த்தம் என்ன ?

ஜப்பானியர்களுக்குத்தான் ஆசியா.

வெளிப்படையாக இந்த மேற்கோள் எல்லோருடைய மனதையும் கவருகிறது. ஜப்பானியர்கள் விடுதலைப்போரைத் துவக்க ஆரம்பித்தபின். அதன் உண்மையான அமைப்பு வெளிவந்தது.

இந்த திட்டம் சமீபகாலத்தில்தான் தோன்றிற்று. இந்த மேற்கோளின் வளர்ச்சி சந்தர்ப்பத்தை ஒட்டி ஏற்பட்டதென்று தோன்றுகிறது. இது டோவா ஷின் சிட்சூகோ, அல்லது கிழக்கு ஆசியாவில் புதிய திட்டம் என்ற பதங்களிலிருந்து உற்பத்தியானது. இந்த மேற்கோளை கொனுயி இளவரசர் 1938-ம் வருஷம் நவம்பர் 3-ம் தேதியன்று உபயோகப் படுத்தினார். ஆகையால் இது ஹிட்லரின் ஐரோப்பிய புதிய திட்டத்தைவிட பழமையான தென்று சொல்லவேண்டும். தூரக்கிழக்கு என்ற பதங்களுக்கு பதிலாக இறுதியில் கிழக்கு ஆசியா என்ற பதங்களைச் சேர்ந்துள்ள இந்த மூலாதாரத்தைப்பெற்ற மேற்கோளை ஜப்பானியர்கள் தங்களுடைய கைகளுக்கு அடிப்படையாக கொண்டார்கள். அதன் ஆரம்ப காலத்தில் இந்தக்கொள்கை ஜப்பான், மஞ்சூரியா, சைனாவைமட்டும் தழுவியிருந்தது. ஐரோப்பாவில் யுத்தம் மூண்டதினால் புதிய சந்தர்ப்பங்கள் தோன்றின. மேற்கோளின் அர்த்தங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாறுதலடைந்தன. 1940-ம் வருஷம் ஜூன்மாதம் 29-ம் தேதியன்று உத்தியோக முறையில் அதற்கு டாய் டோவா கியோயி கென் அல்லது பெரிய கிழக்கு ஆசியா ஸமக்ஷேமக்கொள்கை என்று பெயர் வழங்கப்பட்டது.

1940-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் ஜப்பானிய அயல்நாட்டு பத்திரிகையான மட்சுஓகா டாய் டோவா ஷின் சிட்சுஜோ அல்லது பெரிய கிழக்கு ஆசியாவில் புதிய உலக திட்டம் என்று சொன்னது இவ்விரண்டு மேற்கோள்களையும் ஒன்றுபடுத்தியதாகும். இந்த திட்டப்படி ஜப்பானிய சாம்ராஜ்யம் மஞ்சூரியா, சைனாவுடன் நின்று விடாமல், தாய்லாந்து, பர்மாவுக்கும், உள்வயணமாக இந்தோ சைனா, மலேயா, டச்சு கிழக்கு இந்தியத் தீவுகள், பிலிப்பைன்ஸூக்கும் பரவக்கூடுமென்று பொருள்படும். ஆனால் இந்த வட்டாரத்தில் ஆஸ்திரேலியாவும் நியூஸிலாந்தும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஜப்பானியர்கள் பேர்ல் துறைமுகத்தைத்தாக்க முற்பட்டபொழுதுதான் அவைகளும் ஸமக்ஷேம திட்டத்திற்குள் சேர்க்கப்பட்டன.

ஆகையால் ஜப்பானியர்களின் மேற்கோள்களில் மிகவும் அபாயகரமான எண்ணங்கள் பேர்ல் துறைமுக நடவடிக்கைக்கு 12 மாதங்களுக்கு முன்பே ஸ்பஷ்டமாகிவிட்டன.

அதன் அர்த்தமென்ன,. தூரக்கிழக்கு நாடுகளுக்குள் ஜப்பான் ஒன்றுதான் நவீன பொருளாதார, செல்வ நிலமையை நன்றாய் அறியும் சக்தி பெற்றிருப்பதாலும், உற்பத்தி, வினியோகம் முதலியவற்றில் நவீன முறைகளை ஜப்பான்மட்டும்தான் பரிஷ்காரம் செய்திருப்பதாலும் இந்த தூரக்கிழக்கு வட்டாரத்தின் பொருளாதார நிலமையை அமைக்க அதற்குத்தான் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்த திட்டம் நன்றாய் வேலை செய்துவரக்கூடிய வகையிலும் அமைக்கப்படவேண்டும். இந்த திட்டம் மூன்று வருடங்கள் நிலைபெற்றிருந்தபோதிலும் அது யாருக்குச் சாதகமாக வேலைசெய்து வருகிறதென்பதை நான் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அவர்கள் ஒப்புக்கொண்டபடியே இந்த திட்டப்படி ஜப்பானியர்கள் அதிக பிரயோஜனங்களை அடைந்திருக்கிறார்கள். இந்த திட்டப்படி முறியடிக்கப்பட்ட நாடுகளிலுள்ள உபரியான உற்பத்திப்பொருள்கள் ஜப்பானுக்குக் கொண்டுபோகப்படுகின்றன. அதற்கு பர்த்தியாக ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப் படவில்லை. அதன் பயனாக அவசியமான சாமான்களும் பொருள்களும் மிகவும் குறைந்து விட்டன. அத்துடன் பொருளாதாரக் குழப்பமும் ஏற்பட்டுவிட்டது. ஜப்பானியர்கள் கொடுக்கும் நாணயங்களைக்கொண்டு ஒன்றும் வாங்கமுடியாது. இந்த நிலமையிலிருந்து தோன்றும் அருவருப்பை மறைக்க ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள ஜப்பானிய பிரசாரர்கள் இந்தப்பொருளாதார அசௌகரியங்கள்தான் ஆக்கிரமிப்பு நாடுகள் சமக்ஷேம திட்டத்தை இறுதியில் ஸ்தாபிப்பதற்குச் செய்துவரும் பேருதவியென்று பிரசாரம் செய்து வருகிறார்கள்.

கடற்தளபதி செஸ்டர் வில்லியம் நிமீட்ஸ்.

ராபர்ட் வைத்மான்.

(நியூஸ் கிராணிகள் பத்திரிகை.)

அமெரிக்கா யுத்தத்தில் இறங்கியதற்கு 8 மாதங்களுக்குமுன் 1941-ம் வருஷம் மே மாதத்தில் அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த கடற்படை நிலயத்தின் தலைவர் வாஷிங்ட

னிலுள்ள காபிடோலில் சபையோர்களுக்குச் சொற்பொழிவாற்றி வந்தார். "கடற்படைகள் முன்போல பூர்ண பலத்துடன் மறுபடியும் போர் புரியாதென்று" அவர் சொன்னார்.

"ஒரு போரில் பூரா கடற்படை பலத்தையும் எந்த நிர்வாகமும் துணிவுகரமாக ஈடுபடுத்தாதென்றும், எதிர்காலத்தில் போரை ஸ்பெஷல் படைகள் தான் நடத்துமென்றும் அவைகளும் அவைகளுக்குக் கட்டளையிடப்பட்ட தேவைகளுக்குத் தகுந்தவாறு அமைக்கப்படுமென்றும்" அவர் சொன்னார்.

கடற்படை நிலயத்தின் தலைவர்தான் கடற் தளபதி செஸ்டர் வில்லியம் நிமிட்ஸ். அவர் அமைதியுள்ளவர். வெளுத்த மயிருள்ளவர், சிறிது நீலநிறமுள்ள கண்களைப் பெற்றவர். அவர் அநேக வருடங்கள் நீர்மூழ்கியில் வேலை செய்துவந்ததால் தோள்கள் சிறிது வளைந்திருந்தன.

அக்காலத்தில் அவர் அவ்வளவு வியாபகரல்ல. அமெரிக்காவில் 100-ல் ஒருவர்கூட அவரை அறிந்திருக்கமாட்டார்கள். இன்று அமெரிக்காவில் அவரைத் தெரியாத ஒருவரும் கிடையாது.

மூன்று வருஷங்களுக்குமுன் காங்கிரஸ் சபையோர்களுக்குச் சொற்பொழிவாற்றிய பொழுது கடற்படை சரித்திரத்திலேயே மிகவும் சக்திவாய்ந்த படையை நடத்துவதில் அவர் தலைமை வகிக்கப்போகிறாரென்று அவர் எண்ணவில்லை.

பஸிபிக் கடற்படையின் கடற் தளபதியாக நிமிட்ஸ் நியமிக்கப்பட்டார். உலகத்திலேயே விசித்திரமான சம்பவமாகும்.

1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 7-ம் தேதியன்று ஜப்பானியர்கள் துரோக சிந்தனையுடன் தாக்கியபொழுது பெர்ல் துறைமுகத்திலிருந்த அமெரிக்காவின் மகத்தான பஸிபிக் தளத்தில் ஏராளமான கப்பல்கள் தீக்கிரையாகின. சில கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

கடற்படையின் காரியதரிசியான நாக்ஸும் ஒரு விசேஷ கமிஷனும் ஸ்தலத்தில் விசாரணைசெய்து, தாக்குதல் ஏற்பட்டபொழுது கடற்படை தளபதியாகயிருந்த கிம்மாலுக்கு பதிலாக வேறொருவரை நியமிக்கவேண்டுமென்று முடிவு செய்தார்கள்.

நாக்ஸ் கடற்தளபதி நிமிட்ஸை அந்த ஸ்தானத்துக்கு ஜனாதிபதி ரூஸ்வெல்டிடம் சிபார்சு செய்தார். டிசம்பர் மாதக் கடைசியில் அவர் மனதைக் கலக்கக்கூடிய நிலைமையுள்ள ஒரு மகத்தான வேலையை ஏற்றுக்கொள்ள பெர்ல் துறைமுகத்துக்குச் சென்றார்.

கடற்தளபதி கிம்மலை வேலையிலிருந்து ரிலீவ் செய்த உத்திரவடங்கிய கடிதத்தை நிமிட்ஸ் கிம்மலிடம் கொடுத்தபொழுது கிம்மல் அதை மெதுவாகப் படித்தாராம். இந்த சங்கடமான நிலைமையில் குறுக்கிட்டு நிமிட்ஸ் பேசினார். நான் உங்களிடம் அனுதாபப்படுகிறேன். நானிருந்திருந்தாலும் எனக்கும் இந்த கதிதான் ஏற்பட்டிருக்கும்.

பஸிபிக்கிலுள்ள அமெரிக்கக் கடற்படையில் தைரியமும் சாமர்த்தியமும் தவிர பாக்கி ஒன்றும் இல்லாதிருந்த நெருக்கடியான மாதங்களில் கடற்தளபதி நிமிட்ஸுக்கு எந்த அபாயமும் நேர்ந்திருக்கும். தாக்குதல் ஏற்பட்டால் பெர்ல் துறைமுகம் அழிந்துவிடும் நிலைமையிலிருந்தது.

அதன்பின் அமெரிக்கர்கள் மிட்வேத் தீவில் ஜப்பானியர்களைத் துரத்தியடித்து, கப்பல் கட்டுமிடங்களிலுள்ளவர்கள் அற்புதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அவகாசம் ஏற்படுத்தினார்கள்.

இப்பொழுது எண்ணிக்கையற்ற பஸிபிக் கடற்படையின் கமாண்டை அவர் ஏற்றுக்கொண்டுவிட்டார். இதுவரையிலில்லாத ஒரு மகத்தான கடற்படை பஸிபிக்கில் குவிக்கப்பட்டிருக்கிறது.

நிமிட்ஸின் சரித்திரத்தில் பிரகாசமான தோற்றம் காணப்படுகிறது. ஏனெனில், நிமிட்ஸின் பாட்டனார் ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவுக்கு வந்தார். உள்நாட்டில் அவருக்கு மத சம்பந்தமான சுதந்திரம் கொடுக்கப்படாததால் அவர் அமெரிக்காவுக்குச் சென்று அங்கு அந்த சுதந்திரத்தைப் பெற்றார்.

19-வது நூற்றாண்டின் மத்தியில் டெக்ஸாஸிலுள்ள பிரடரிக்ஸ் பர்க்கில் காப்டன் நிமிட்ஸ் நிர்மாணம்செய்த காலனியின் மத்தியில் கடற் தளபதிக்கு ஒரு வீடு இருக்கிறது.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

(16) தேக ஆரோக்கியம்.

சொற்பொழிவாளர்கள் :—மிஸ்ட்டர் விக்ஹாம் ஸ்டீட் (தலைவர்).
மொரான் பிரபு.
லெப்டினண்ட் கர்னல் S. P. ஜேம்ஸ்.

(1944ஹு அக்டோபர் 9-ம் தேதியன்று கிழக்கு நாடுகளுக்குச் செய்யும் பிரிடிஷ் ஒலிபரப்புப் பிரசங்கம்).

ஸ்டீட் : சென்றவாரம் போஷணையைப்பற்றிச் சர்ச்சை செய்தோம். இன்று நாம் தேக ஆரோக்கியத்தைதப்பற்றிப் பேசுவோம். தேக ஆரோக்கியத்துக்கு போஷணை அத்தியாவசியமானதென்று நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா.

மொரான் : இது வம்சசுகூறு என்று நினைக்கிறேன். இதை கர்னல் ஜேம்ஸ் ஒப்புக்கொள்ள மாட்டார் என்று நினைக்கிறேன்.

ஜேம்ஸ் :— இது இயற்கைக்கும் போஷணைக்கும் உள்ள சம்பந்தத்தைப் பொருத்தது. நான் இந்தியாவிலிருந்தவரையில் ஸந்நிவேசத்தின் அமைப்புதான் முக்கியமுள்ளதென்று நான் சொல்லிவந்தேன். ஆகிலும் நல்ல திடகாத்திரமுள்ள வம்சத்தில் ஜனித்தவர் அவ்வித மில்லாதவரைவிட சிலாக்கியமானவரென்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது.

மொரான் : இது ஒப்புக்கொள்ளக்கூடியதுதான். ஆகிலும் தேக ஆரோக்கியத்தை போஷிப்பதற்கு புஷ்டிப்பொருள்களும் முக்கியமானவை என்பதைக் குறைத்துக்கூறக்கூடாது.

ஸ்டீட் : நாம் இன்று சர்ச்சை செய்யவேண்டியது யுத்தத்துக்குப்பின் எவ்விதம் தேக ஆரோக்கிய வளர்ச்சி செய்வது என்ற பிரச்னை. தேக ஆரோக்கியத்தைக் கெடுத்து விடக்கூடிய வியாதியை எவ்விதம் ஒழித்துவிடுவது என்பவைதான். மொரான், உலகத்தில் இருந்துவரும் வியாதிகளைக் குறைக்கவும் இறுதியில் அவைகளை நிர்மூலமாக்கவும் நாம் என்னசெய்யக்கூடும்.

மொரான் : இது மகத்தான பிரச்னை. இதற்குப் பூர்ணமான பதிலை அளிப்பது சாத்தியமில்லை. இப்பொழுது ஒன்று அல்லது இரண்டு அம்சங்களைமட்டும் சொல்லுகிறேன். ஒன்று போஷணை, மற்றவைகள், சுகாதாரம், பரிசுத்தம், வீடுகளுக்கு நல்ல காற்றுவசதி, வியாதிக்குறிய காரணங்களை ஜனங்கள் அறியும்படி போதித்தல். நல்ல திடகாத்திரத்தை வளர்ப்பதற்கு அநேக காரணங்கள் இருப்பதுபோல் அதைக் கெடுத்துவிடுவதற்கும் அநேக அம்சங்களிருக்கின்றன.

ஸ்டீட் : உலகத்தின் பலபாகங்களிலுள்ள நிலமையையும் கிராம வாசத்திற்கு பதிலாக டவுன் வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற இயல்பையும் நீங்கள் மதித்துப் பார்க்கிறீர்களா?

ஜேம்ஸ் : தேக ஆரோக்கிய சர்ச்சையில் நாம் சீதோஷ்ண ஸ்திதியையும் கவனிக்கவேண்டும். ஆனால் சீதோஷ்ண ஸ்திதி என்ற பதத்திற்கு விரிவான பொருளை நாம் தரவேண்டும். இந்தியாவில் சீதோஷ்ண ஸ்திதி கடுமையாக இல்லாவிட்டாலும் ஜனங்கள் கிருமிகளின் மூலம் தொத்துவியாதிகளைப் பெறுகிறார்கள். முக்கியமாக, மலேரியா, காலரா, வயிற்றுப்போக்கு, குஷ்டம், கால அஸார் முதலிய வியாதிகளுக்கு ஆஸ்பதமான கிருமிகளை நான் குறிப்பிடுகிறேன்.

மொரான் : உலகத்தின் வியாதிகளை எவ்விதம் ஒழிப்பது என்று நமது தலைவர் கேட்ட கேள்விக்கு நீர் அளித்த பதிலை யொட்டிப் பின்னும் சில விஷயங்களைச் சொல்ல நான் முயன்றேன். இந்த வியாதிகளின் அமைப்பு என்னவென்றும் அவைகளின் சரித்திரமென்னவென்றும். முதலில் நாம் அறிந்துகொண்டு அதன்பின் அவைகளை அழித்து நிர்மூலமாக்குவதற்கு வேண்டிய உபயோகமுள்ள முறைகளை ஏற்பாடு செய்யவேண்டும்.

ஸ்டீட் : ஜனங்கள் கிராமங்களைவிட்டு நகரத்துக்கு குடியேறுகிறார்களென்று நான் சொன்னதை நீங்கள் சர்ச்சை செய்யவில்லை. இந்த நடவடிக்கை எவ்விதம் தேக ஆரோக்கியத்தை பாதிக்கிறது. அதிலிருந்து மிகுதியான தேக அசௌக்கியம் ஏற்படுமென்று நினைக்கிறீர்களா?

மொரான் : இரண்டிலும் சௌகரியா சௌகரியங்களிருக்கின்றன. நாட்டுப்புறத்தில் சுலபமாக தேக ஆரோக்கியத்துடன் வசித்துவரலாம். நகரத்தில் ஜன நெருக்கமும் தேகப்பயிற்சி, நல்ல காற்றுக் குறைவும் ஏற்படும். ஆனால், நகரத்தில் நல்ல குடிதண்ணீரும், வைத்திய வசதியும் சுலபமாகக் கிடைக்கக்கூடும். பொதுவாக நகரத்தில் வசதிகள் அதிகம்.

ஜேம்ஸ் : இது தனிப்பட்ட நபர்களின் சுகாதாரத்தைப்பொருத்தது. மற்றொன்று ஸந்நிவேசத்தைப்பொருத்த சுகாதாரம். இதற்கு அரசாங்கமோ அல்லது ஜனசமூகமோ பொருப்பாளிகள். இதன் முக்கிய அம்சங்கள், நல்ல வீடுகள், காப்பாற்றப்பட்ட குடிதண்ணீர் வசதி, நன்றாய் கவனிக்கப்பட்ட பரிசுத்த ஏற்பாடு.

ஸ்டீட் : கர்னல் ஜேம்ஸ், பொதுஜனங்களின் தேக ஆரோக்கியத்தை விருத்திசெய்ய நிர்வாகம் என்ன செய்யவேண்டும்.

ஜேம்ஸ் : முதலாவதாக வியாதிக்குக்காரணங்களை சாஸ்திரமுறையில் வைத்திய நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்யவேண்டும். இந்தியா சம்பந்தப்பட்டமட்டில் ஜனங்களை அழிக்கும் தொத்துவியாதிகளை முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும். அங்குள்ள சீதோஷ்ணஸ்திதி, பாக்டீரியா, புரோடோஸோ, கிருமிகள் முதலியவற்றை வளர்ச்சிக்கின்றன. இந்தியாவுக்குச் செல்லும்பொழுது நல்ல ஆரோக்கிய மிருந்தபோதிலும் நமது ஸோல்ஜர்கள் அங்கு சென்றவுடன் ஏதாவது ஒரு தொத்து வியாதிக்கு உட்படுகிறார்கள். ஈக்கள், மோட்டுப்பூச்சிகள், பேன்கள், கொசுக்கள், இந்த வியாதிகளுக்கு மூலகாரணம். இவைகளை ஒழித்துவிட்டால் இந்தியாவிலுள்ளவர்களின் தேக ஆரோக்கியத்துக்குப் பெரும்சேவை செய்ததாகும்.

மோரான் : நமது நாட்டிலுள்ளவர்கள் உஷ்ணந்தரேகை வட்டாரத்திலுள்ளவர்களுக்கு ஏற்படும் வியாதிகளுக்கு உட்படவில்லை. நமது பிரச்னைகள் வேறுவிதமானவை. இங்கு க்ஷயரோகம் அதிகமாக இருக்கிறது.

ஜேம்ஸ் : இந்தியாவிலும் க்ஷயரோகம் அதிகரித்து வருகிறது.

மோரான் : க்ஷயரோகத்தை நிவர்த்திக்கவேண்டுமானால் சுத்தமான பாலும், சுகாதார முறையில் ஜீவனமும் அவசியமாகும். நல்ல காற்றுள்ள வீடுகளும், மிகுதியான சுத்தமான காற்றும், சூரியவெளிச்சமும் தேவைப்படும்.

ஜேம்ஸ் : இந்தியாவில் ஏராளமான சூர்யவெப்பம் மிகுதியாக இருந்தபோதிலும் பால் மிகுதியாக இல்லை.

ஸ்டீட் : போன சர்ச்சையிலும் இவ்விதம் கடன் சொல்லப்பட்டது. மலேரியாவையும் கொசுக்களையும் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

ஜேம்ஸ் : இந்தியாவிலும் கொசுக்கள் ஏராளம். மலேரியா ஸோல்ஜர்களிடமும் பரவியிருக்கிறது. மலேரியாவைப் பரவச்செய்ய கொசுக்கள் 80 டிகிரி பாரன்ஹீட் உஷ்ணமுள்ள ஒரு உஷ்ணமான பிரதேசத்திற்குச்சென்று குறைந்த பக்ஷம் 12 நாட்களாவது அங்கு தங்கியிருக்க வேண்டும். அதன் வயிற்றிலுள்ள கிருமிகள் அதற்குள் விருத்தியடைந்துவிடும் அதன்பின் அது வெளியே சென்று ஒருவரைக்கடித்து மலேரியாவைப் பரவச்செய்யும்.

மோரான் : சமீபகாலத்தில் நான் ரோமுக்குச் சென்றபொழுது அங்கு மலேரியா இல்லை. கொசுக்கள்மட்டும் இருந்தன. ஆகிலும் மலேரியா ஜுரமுள்ள ஸோல்ஜர்கள் வந்தவுடன் அந்த மாகாணம் மலேரியா வியாதியுள்ளதென்று சொல்லப்பட்டுவிட்டது.

ஸ்டீட் : மலேரியாவை ஒழித்துவிடலாமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள், தேக ஆரோக்கியத்துக்குக் குறைவான வியாதிகளை ஒழிக்கவும், தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றவும் சர்வதேச திட்டம் ஏற்படுத்தும் தருவாயில் நாம் இருந்து வருகிறோம். ஹாட் ஸ்பிரிங்க்ஸ் மகாநாட்டில் போஷணையைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். உண்மையான திறமைவாய்ந்த நேசதேசத்தாரின் சர்வதேச ஸ்தாபனம் இந்தியாவின் ஜனங்களின் தேக ஆரோக்கியத்தை விருத்தி செய்யக்கூடுமென்று நினைக்கிறீர்களா ?

ஜேம்ஸ் : சர்வதேச சங்கத்தைச்சேர்ந்த அநேகம் கமிஷன்களில் நான் சிலகாலம் வேலை செய்திருக்கிறேன். சர்வதேச ஸ்தாபனம் நிர்வாகிகளுக்கு அநேக விஷயங்களை போதிக்கக்கூடுமென்று நினைக்கிறேன். ஆனால் மற்றெல்லா நாடுகளைப்போலும் இந்தியா அதன் மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைத்தானே செய்துகொள்ள பிரியப்படுகிறது.

மோரான் : எதிர்காலத்தில் நேசதேசத்தார்கள் செய்யவேண்டுமென்பதை, ஒரு சிறிதளவில் ராக்பெல்லர் ஸ்தாபனம் இந்தியாவில் செய்து வரவில்லையா ?

ஜேம்ஸ் : வாஸ்தவம்தான்.

ஸ்டீட் : ராக்பெல்லர் ஸ்தாபனத்திற்கு ஏராளமான ஐவேஜியிருக்கிறது. ஆகையால் அது எதையும் செய்யக்கூடும். ஆரம்பச் செலவைச் சரிக்கட்டக்கூடிய அளவிற்காவது நேச தேசத்தாருக்குப் பொருள் கிடைத்துவிடுமென்று நாம் நினைக்கலாம். ஆகிலும் ஒவ்வொரு தேசத்தின் பிரச்னைகளும் வெவ்வேறாக இருக்கின்றன. தொத்து வியாதிகளைத் தவிர இந்தியாவின் விசேஷமான சுகாதார பிரச்னைகள் என்ன ?

ஜேம்ஸ் : தேக ஆரோக்கிய சம்பந்தமாக இந்தியாவில் சிலாக்கியமான திட்டம் இருந்து வருகிறது. அதை அமுல் நடத்துவதற்குத்தான் பொருள் மிகுதியாக வேண்டும். இந்தியா முதல் முதலில் தொத்து வியாதிகளை ஒழிப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

ஸ்டீட் : இது அகில இந்தியா பிரச்னையல்லவா ?

ஜேம்ஸ்: இது அகில இந்தியா பிரச்னைதான். இந்தியாவில் இரண்டு பிரச்னைகளிருக்கின்றன. ஒன்று சர்வ தேசங்களையும் பொருத்தது. மற்றொன்று ஆங்காங்குள்ள மாகாணங்களைப் பொருத்தது. இந்தியாவில் தொத்து வியாதிகள் மிகுதியாக இருப்பதால் மற்ற நாடுகள் அதைக்கண்டு அஞ்சுகின்றன. இந்தியாவிலிருந்து வரும் எந்தக் கப்பலும் துறைமுகத்துக்கு வெளியிலேயே நிலைபெறவேண்டும். ஆகையினால்தான் குவாரண்டைன் விதிகளை இந்தியா சம்பந்தப்பட்டமட்டில் நாம் கடுமையாக அமுல் நடத்துகிறோம்.

ஸ்டீட்: நான் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு சீர்கெட்டுப்போயிருந்த நாளில் 1897-ம் வருஷத்தில் வெனிஸில் நடைபெற்ற சர்வதேச பரிசுத்த மகாநாட்டிற்குச் சென்றிருந்தேன். மகாநாட்டில் முக்கியமாக பிளேக்கைப்பற்றி சர்ச்சை செய்துவந்தார்கள். இந்தியாவிலிருந்துவரும் கப்பல்களை எவ்விதம் நடத்துவதென்ற பிரச்னையும் விவாதிக்கப்பட்டது.

ஜேப்ஸ்: இந்தப் பிரச்னை இன்னும் முடிந்தபாடில்லை. 52 தேசங்களின் பிரதிநிதிகள் கூடும் பாரிஸில் நடைபெறும் சர்வதேச பொதுஜன சுகாதார ஆபீஸின் ஒவ்வொரு கூட்டத்திலும் இந்தியாவிலுள்ள பிளேக், காலரா, அம்மை முதலியவற்றைப்பற்றியும், மஞ்சள் ஜுரம் இந்தியாவுக்குப் பரவுகிறதா அல்லது அங்கிருந்து மற்ற நாடுகளுக்குப் பரவுகிறதா என்ற பிரச்னைகள் விவாதிக்கப்படாமலிருந்ததே கிடையாது. இந்த கோரமான தொத்து வியாதிகளை ஒழிப்பதுதான் தற்போதிய முக்கியமான வேலை. இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் காணப்படும் இந்த வியாதிகளை ஒழிக்கவேண்டுமானால் வைத்திய நிபுணர்களின் ஆராய்ச்சி அவசியமாகும். இந்தியாவில் சகலவிதமான வைத்திய வசதிகளும் குறைவாக இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஸ்டீட்: இந்தியாவில் டாக்டர்களும் தாதிகளும் குறைவாக இருக்கிறார்களென்று சொல்லுகிறீர்களா?

ஜேம்ஸ்: இது மிகவும் குறைவாக இருக்கிறது. 9,000 பேர்களுக்கு ஒரு டாக்டர்தானிருக்கிறார். பயிற்சிபெற்ற தாதிகளும் குறைவாக இருக்கிறார்கள். இந்தியாவில் 40,000 வைத்தியர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தியாவில் 3 லக்ஷம் டாக்டர்கள் தேவைப்படுமென்று கணக்கிடப்படுகிறது.

ஸ்டீட்: நமது சர்ச்சைகளில், முக்கியமாக கல்வி சம்பந்தமாக, பயிற்சியளிக்கும் சர்வ கலாசாலைகள் தேவையென்று நாம் வற்புறுத்தினோமல்லவா. அவைகள் தேக ஆரோக்கிய சேவையினருக்கும் அன்வயிக்குமல்லவா?

மோரான்: அமெரிக்காவிலுள்ள ஜான்ஸ் ஹாட்கின்ஸ் சர்வகலாசாலையைப்போல் ஒரு ஸ்தாபனமிருந்தால் அதில் உபாத்தியாயர்களைப் பயில்வித்து வைத்திய சம்பந்தமான படிப்பை அபிவிருத்தி செய்ய ஏற்பாடுகள் செய்துவிடலாம். இந்தத்துறையில் நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஸ்டீட்: இந்தியா நிர்வாகம் சுகாதாரத்துக்குறிய சேவையாளர்களை அதிகரிக்க அதிக முயற்சி செய்யவில்லையென்று குறை கூறுகிறவர்கள் சொல்லுகிறார்கள்.

ஜேம்ஸ்: இந்தக்குற்றச்சாட்டுகளில் சிறிது உண்மையுமிருக்கிறது. ஆனால் சொல்லுவதில் அநேகம் ஞாயமற்றவை.

நார்மன்: பிரிடனில் 100 வருடங்களுக்குப்பின்தான் சிறந்த சுகாதார சேவையாளர்கள் அமைக்கப்பட்டிருக்கிறார்களென்று சொன்னாலும், இந்தியாவில் குறைவான காலத்தில் அவைகளை ஏன் அமைக்கக்கூடாதென்பதற்கு யாதொரு முகாந்திரமில்லை. ருஷ்யா இந்த ஏற்பாடுகளைச் சொல்பகாலத்திற்குள் நிறைவேற்றிருக்கிறது,

ஜேம்ஸ்: ஆம். இந்தியாவில் ஜீவதசையின் பெரும்பாகம் வசித்துவந்த ஒருவர் கிழக்கு ஐரோப்பிய நாட்டிற்குச்சென்றார். அவர் அங்குள்ள ஜனங்கள் வசித்துவரும் நிலமையைக்கண்டு ஆச்சரியமடைந்தார்.

மோரான்: வியாதியைப்போக்கடிக்கும் முற்போக்குக்கு இரண்டு காரணங்கள் அடிப்படையானவை. ஔஷதங்களைக் கண்டுபிடிப்பது, ரண சத்திர வைத்தியத்தில் மாறுதல்களை உண்டுபண்ணின லிஸ்டரின் புத்தகம் போன்ற ஜனசமூக சட்டதிட்டங்களுக்கும் அவைகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. புதிய முறைகளைக் கண்டுபிடிக்கக்கூடிய புத்திகூர்மையுள்ள ஒருவர் உண்டாகவேண்டுமென்று நான் நினைக்கிறேன். இப்பொழுது நாம் சாதாரணமான ஜனசமூக சட்டதிட்டங்களைக் க்வனிப்போம். இவைகளில் சிசுமரணம், தாயார்களின் மரணம், இவைகளின் குறைவு ஜீவதசையின் நீடிப்பு. இவைகள் சம்பந்தமான நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்கவை.

ஜேம்ஸ்: இந்திய நிர்வாகம் ஆராய்ச்சி விஷயத்தில் அநேக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. மத்திய ஆராய்ச்சி ஸ்தாபனம் ஒன்றிருக்கிறது. ஒவ்வொரு மாகாணத்திலும் ஆராய்ச்சி வேலையைமட்டும் 15, 20 பேர்கள் செய்துவரும் பாக்டீரியா ஆராய்ச்சி ரஸாயனப் பரீக்ஷசாலை இருக்கின்றது. ஆகிலும் 1,000 மிலியன் ஜனங்களுள்ள இந்தியாவில் பொதுவான ஆராய்ச்சி செய்கிறவர்கள் இருக்கவில்லை.

மோரான்: இந்தியாவில் ஆராய்ச்சியின் பூராப்பொருப்பையும் அவர்கள் உணரவில்லை யென்று இந்த வாக்கியம் பொருள்படும் என்று அரசாங்கத்தார்கள் நினைக்கக்கூடும்.

ஜேம்ஸ்: அவர்களும் இதை உணரவில்லை. வியாதியின் காரணத்தையும் அதைப்பரவ வொடாமல் தடுப்பதையும் ஆராய்ச்சி செய்வதுடன், ஆராய்ச்சியின் விளைவுகளை அனுப வத்தில் அமுலுக்குக்கொண்டுவருவதற்கும் முயற்சி செய்யப்படவேண்டும்.

ஸ்டீட்: கர்னல் ஜேம்ஸ், இந்தியாவிலுள்ள வியாதிகளின் பெரும்பகுதிக்கு ஸ்தாபனங்கள் தான் காரணமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

மோரான்: இங்கிலாந்திலும் இந்த நிலைமைதான் காணப்படுகிறது. ஆகிலும் சென்ற சில பத்து வருஷங்களாக நமது தேசமக்களின் தேக ஆரோக்கியம் அபிவிருத்தி அடைந் திருக்கிறது.

ஸ்டீட்: நமது நாட்டின் தேக ஆரோக்கிய அபிவிருத்திக்கு, நவீன முறைப்படி நடைபெறும் சிகிச்சை காரணமா, அல்லது ஆகார முறை காரணமா, அல்லது சுகாதார சம்பந்தமாக ஜனங்களுக்கு அதிக அறிவு ஏற்பட்டிருப்பது காரணமா?

மோரான்: மூன்றும்தான் காரணங்கள். நமது ஆராய்ச்சிக்காரர்களும், ஸல்போனமிடிஸ், பெனிஸிலின் போன்ற அநேக மருந்துகளைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகிலும் நமது தேக ஆரோக்கியத்துக்கும் அதிக நாள் ஜீவித்திருப்பதற்கும், பொது ஜன சுகாதார சேவைப்படை, நல்ல குடி தண்ணீர் சப்ளை, நவீன முறையில் அமைக்கப் பட்ட சாக்கடை வசதிகள் முதலியனதான் காரணங்களாகும்.

ஸ்டீட்: பொதுஜனங்களின் தேக ஆரோக்கியத்திற்கு பொதுஜனங்களின் கல்வி எவ்விதம் சாதகமளிக்கிறது?

மோரான்: வெகுதூரம். ஆகிலும் தேக ஆரோக்கிய உணர்ச்சி என்பதில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. முதலாவது சிறந்தது. சமாதானத்தைப்போல் தேக ஆரோக்கியத் துக்கும் நாம் பாடுபடவேண்டுமென்பதை அது ஜனங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. இதை எவ்வளவுக்கெவ்வளவு ஜனங்கள் உணருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர் களின் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுவார்கள். இந்த விஷயத்தில் அதிகமாகக் கவனம் செலுத்துவதில் ஒரு சிறிது அபாயமிருக்கிறது. தேக ஆரோக்கியத்தைப் பற்றியும், வியாதிகளைப் பற்றியும் ஜனங் களுக்கு அளவு கடந்த அறிவு ஏற்பட்டால் அவர்கள் ஆத்ம சோதனையிலிறங்கி விடுவார்கள்.

ஜேம்ஸ்: தேக ஆரோக்கியக் கல்வி விஷயத்தில் மற்றொரு அம்சமிருக்கிறதென்று மோரான் சொல்லுவதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். தேக ஆரோக்கியத்துக்குப் பீதிதான் முக்கிய காரணம். சிலர் வியாதிகளைக் கண்டு மிகுதியான பீதி அடைந்து விடுவதால் அந்த தியானம் அவர்களுடைய மனதிலிருந்து அகன்றுவிடுவதேயில்லை.

மோரான்: எனினும், தேச மக்களின் தேக ஆரோக்கியத்தை விருத்திசெய்ய நமது சுகாதார இலாகாவும் பத்திரிகைகளும் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சி வியர்த்தமானதல்ல. ஏற்கனவே அவைகளுக்கு நல்ல பயன்களும் ஏற்பட்டுவிட்டன.

ஸ்டீட்: இந்தியா போன்ற சில நாடுகளுக்கு நேசதேசத்தார்கள் உதவியளிக்க முன் வரும் பொழுது, முதன் முதலாக நாம் எவ்வித நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

ஜேம்ஸ்: இது விஷயத்தில் இந்தியாவில் மிகுதியான சிரமம் இருக்கிறது. இந்த வியாதி களை அந்தந்த பிரதேசங்களிலும், ஜனங்களின் வீடுகளிலும் நாம் கவனிக்கவேண்டும். நாம் வீடுகளுக்குள் அதற்காகச் செல்லவேண்டும். ஜனங்களின் வீடுகளுக்குள் செல் லாமல் இந்த வியாதிகளை நிவர்த்திக்க முடியாது.

மோரான்: அவ்விதம் செய்தாலும், இந்தியாவிற்கு, சுத்தமான குடி தண்ணீர் ஸப்ளையும், மிகுதியான பாலும், பொதுவான சிறந்த பரிசுத்த முறைகளும் ஏற்பாடு செய்யப்படா விட்டால் நாம் அதிகமான முன்னேற்றமடைய முடியாது.

ஜேம்ஸ்: இதற்கு ஆட்களும் பொருளும்தான் தேவைப்படும். ஆனால் வியாதியை போக்கடிப் பதற்குப் போதுமான டாக்டர்கள் வேண்டும். இந்தியாவிலுள்ள விவசாயி வைத்தியம் செய்துகொள்ள சமீபத்திலுள்ள ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டுமானால் ஐந்துமைல்கள் செல்லவேண்டியிருக்கிறது.

ஸ்டீட்: இந்தியா பூராவுக்கும் ஒன்றுபட்ட தேக ஆரோக்கியக் கொள்கை இருக்கவேண்டு மென்று நீங்கள் நினைக்கிறீர்களா? இந்தியா, பாகிஸ்தான், ஹிந்துஸ்தான் என்று பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டால் இந்த பிரச்னை பாதிக்கப்படுமா, அல்லது தேக ஆரோக்கியம் சம்பந்தப்பட்டமட்டில் ஒன்றுபட்ட அரசாங்க திட்டம்தான் இந்தியாவின் க்ஷேமத்தைக் கோருமா?

ஜேம்ஸ்: இந்தியாவில் பாகப்பிரிவினை ஏற்பட்டாலும், மற்ற தேசங்களுடன் சம்மந்தம் ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய மத்திய நிர்வாக அமைப்பு அவசியமாகத்தானிருக்கும்.

ஸ்டீட்: நமக்கு நேரமாகிவிட்டபடியால், தேக ஆரோக்கிய சம்பந்தமான பிரச்னைகளில் அவருக்குள்ள நீண்ட அனுபவத்தை ஒட்டி தேக ஆரோக்கியத்துக்கு முக்கியமான அம்சங்கள் எவையென்று மெஸ்டனைச் சொல்லுமாறு கேட்கிறேன். நீங்கள் யதேச்சாதிகாரி பதவியை வகித்தால் பொதுமக்களின் தேக ஆரோக்கியத்தைப் பரிஷ்காரமாகச் செய்ய என்ன முறைகளைக் கையாளுவீர்கள்.

மோரான்: இந்த மாதிரி மனோராஜ்யம் செய்துகொண்டு பேசுவது அபாயகரமானது. மேலும் நீங்கள் சொல்லுவதுபோல் நடைபெறவே நடைபெறாது. உங்களுடைய வினாவுக்கு நான் ஒருவாறு விடையளிக்கிறேன். தேக ஆரோக்கியத்திற்கு இரண்டு முக்கிய அம்சங்களிருக்கின்றன. ஒன்று ஒவ்வொருவரும் தன்னுடைய தேகத்தின் ஆரோக்யத்தைக் கவனித்துவரவேண்டும். மற்றொன்று அவன் இருக்கும் ஜனசமூகம் அதில் பொருப்பெடுத்துக்கொள்ளவேண்டும். முதலாவது சம்பந்தப்பட்டமட்டில் தேக ஆரோக்கிய சம்பந்தமான எல்லா பிரச்னைகளிலும் ஜனங்களுக்கு விரிவான அறிவு ஏற்படவேண்டும். ஜீவதசை ஆரம்பம் முதல் அவனுடைய தேகத்தின் அவயவங்கள் எவ்விதம் வேலைசெய்து வருகின்றனவென்றும், அவைகளை எவ்விதம் ஜாக்கிரதையுடன் பரிபாலிக்கவேண்டுமென்றும், பயிற்சிபெற்ற ஒருவனை ஜனசமூகத்தில் சிறந்தவானென்று நான் கருதுவேன். ஜனசமூகமானது தேக ஆரோக்கியத்துக்குரியதும், வியாதிக்குட்படக்கூடாததுமான சந்நிவேசங்களில் தனிப்பட்டவர் வாழவேண்டுமென்பதில் அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும். பரிசுத்தக் குறைவினாலோ அல்லது சுகாதாரக் குறைவினாலோ தொத்து வியாதிகள் பரவக்கூடாத வண்ணம் ஒவ்வொருவரும் காப்பாற்றப்படவேண்டும். அதாவது அவனுக்கு சுத்தமான குடிதண்ணீரும், சுத்தமான பாலும், பரிசுத்தமுள்ள வீடுகளும், மற்ற சௌசரியங்களும் வழங்கப்படவேண்டும்.

ஸ்டீட்: தேக ஆரோக்கியத்தைப்பற்றித் தாங்கள் வெளியிட்ட அபிப்பிராயத்துக்காக தங்களுக்கும் (மொரான்), இந்தியாவிலும், மற்ற நாடுகளிலும் இந்த பிரச்னைகள் சம்பந்தமாகத் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைஒட்டித் தாங்கள் வெளியிட்ட விஷயங்களுக்காக தங்களுக்கும் (கர்னல் ஜேம்ஸ்) என்னுடைய நன்றியறிவைச் செலுத்துகிறேன். இந்தப் பிரச்னைகள் வெவ்வேறாகவும், வெவ்வேறு தேசங்களுக்கும், வெவ்வேறு சீதோஷ்ணஸ்திதிக்கும் தக்கவாறு வெவ்வேறு திட்டங்களையும் அமைக்கக்கூடியதாக இருக்கும். ஆகிலும் நவீன முறையிலுள்ள போக்குவரத்து வசதியாலும், சக்தியால் ஓடும் சாதனங்களினாலும், காலவரம்பிலும் தேசவரம்பிலும் உலகம் நெருங்கிவருவதினால், உலக சமாதானத்தைப் போல, உலக ஆரோக்கிய திட்டமும் ஒன்றுபட்டிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

கண்ணால் கண்டுதான் அறிய வேண்டும்.

வருங்காலத்திற்காக சேமித்து வைக்கவேண்டுமென்ற அவசியத்தை குறைந்துவரும் விலைவாசிகள்தான் ருசிப்பிக்கின்றன.

சென்ற வருஷத்திலும், இந்த வருஷ ஆரம்பத்திலும் அரசாங்கத்தார் கடுமையான கட்டுப்பாடு முறைகளை மேற்கொள்ளாமலும் தேவைப் பொருள்களை மிகுதியாக உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்திராதிருந்தாலும், சென்ற வருஷத்திலிருந்தது போல விலைவாசிகள் அதிக உயர்வாக இருந்திருக்கும்.

ஆனால் பொது ஜனங்களின் சேமிப்பு முறையும், அரசாங்கத்தாரின் நடவடிக்கையும் கண்காணிப்பும் விலைவாசிகளைக் குறைத்துவிட்டன. நகைகளிலும், சொத்துக்களிலும், சாமான்களிலும் பொருளை முட்டாள்தனமாக முதலீடு செய்தவர்கள் அவர்களின் முன்னாலேயே அந்த முதலீடுகளின் பொருமானம் குறைவதைக் காண்கிறார்கள்.

விலைவாசிகளின் கீழ் நோக்குதல் இத்துடன் ஓய்ந்து விடாது. புத்திசாலிகளாக இருங்கள். மோசம் போகாதீர்கள். கூட்டுறவு சங்கங்களிலும், இன்ஷ்யூரன்ஸிலும், போஸ்ட் ஆபீஸ் சேமிப்பு பாங்கியிலும், சர்க்கார் கடன் பத்திரங்களிலும், தேசிய சேமிப்புப் பத்திரங்களிலும் பணத்தைப் போடுவது சிறந்த முதலீடாகும். விலைவாசிகள் குறையக் குறைய இந்த முதலீடுகளின் மதிப்பு அதிகரிக்கும்.

ஆகையால் தமாஷ் செலவு செய்யாதீர்கள். யுத்தத்துக்குப்பின் புதிய ஆடைகளையும், புதிய மரச் சாமான்களையும், புதிய வீடுகளையும், புதிய சைக்கிள்களையும், மோட்டார் கார்களையும் வாங்கப் போதுமான அவகாசமிருக்கிறது. இப்பொழுது பொருளைச் சேமித்து பிறகு அவற்றைச் செலவிடலாம்.

முடிந்த வரையில் பொருளைச் சேமித்து அதை முதலீடு செய்யுங்கள்.

ஆள் சேமிப்பு விஷயம்.

நவம்பர் மாதம் 11-ம் தேதி திங்கட்கிழமை சாயங்காலம் 4.30-மணிக்கு மூவகைப் பட்ட சேவைகளின் மூலம் இந்நாட்டிலுள்ள வாலிபர்களுக்கு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களைப்பற்றி மேஜர் பானர்மான் புதுக்கோட்டை சர்வகலாசாலை மாணவர்களுக்கு ஒரு பிரசங்கம் செய்தார். படைகளில் சேரும்படிக்கும் அவர்களை புரோத்சாகப்படுத்தினர்.

'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரு. 1—8—0; ஷீப்ஸ்கின் ரு. 1—12—0; மொராக்கோ ரு. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்):—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரு. 0—4—3

அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்கு முந்துங்கள்! ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்:—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 227. (1-வது பிரிவு).

9-12-44	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00	13-12-44	குழிபிறை	... மாலை	7.00
10-12-44	பூவரசகுடி	... ,,	7.00	,,	செவலூர்	... ,,	7.30
,,	வேங்கடக்குளம்	... ,,	7.30	14-12-44	பனையப்பட்டி	... ,,	7.00
11-12-44	வெங்களூர்	... ,,	7.00	,,	பாங்கியம்	... ,,	7.30
,,	கோனாபட்டு	... ,,	7.30	15-12-44	கொடும்பாளூர்	... ,,	7.00
12-12-44	அண்டக்குளம்	... ,,	7.00	,,	விராலூர்	... ,,	7.30
,,	கிள்ளனூர்	... ,,	7.30				

பிரஸங்கம் 228. (2-வது பிரிவு).

16-12-44	பாப்பனாச்சிவயல்	... மாலை	7.00	20-12-44	மழையூர்	... மாலை	7.00
17-12-44	சூரக்காடு	... ,,	7.00	,,	கரம்பக்குடி	... ,,	7.30
,,	கோட்டைக்காடு	... ,,	7.30	21-12-44	வாளரமாணிக்கம்	... ,,	7.00
18-12-44	தென்னதிரயன்பட்டி	... ,,	7.00	,,	ஏம்பல்	... ,,	7.30
,,	விசலூர்	... ,,	7.30	22-12-44	விராலிமலை	... ,,	7.00
19-12-44	ராமச்சந்திரபுரம்	... ,,	7.00	,,	பொருவாய்	... ,,	7.30
,,	ராயவரம்	... ,,	7.30				

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

9—12—44	திருமெய்யம்.	16—12—44	வெட்டம்விடுதி.
10—12—44	தீத்தான்விடுதி.	17—12—44	மருதன்கோன்விடுதி.
12—12—44	வடகாடு.	19—12—44	ராமச்சந்திரபுரம்.
14—12—44	கீழாநிலை.	21—12—44	ஆலங்குடி.
15—12—44	புதுக்கோட்டை.	22—12—44	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—13-12-44.